KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு ஜனவரி மீ 3 உ [No. 1

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 1

2. பொதுமையின் அதிசயம்
T. N. சேஷாசலம் B.A., B.L. 3

3. கம்பராமாயணம் (கார்காலப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 6

4. நகைச் சுவை
R. நரஸிம்மன் B.A. (Hons) 8

5. வில்லிபாரதம் (துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 9

6. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 1.)
Shakespeare's—"Othello" 11

7. அணியிலக்கணம் (முன்னுரை) 14

8. வர்த்தமானம் 16

## க லா நி ல ய ம்

இவ்விதழினுடன் நம் கலாநிலயம் எட்டாவது ஆண்டினை எய்துகின்றது. இதழ்களில் குறிக்கப்பட்டிருக்குந் தேதிக்கும் அவை வெளிவருங்காலத்திற்கும் மூன்றுமாதவேற்றுமை இருக்கின்றதாயினும், வர்த்தமானப் பத்திரிகைகளின் வேகம் இதனிற்கு இன்றியமையாததொன்று அன்றாதலின், இக்குறையினைப் பெரிது ஒருவரும் பொருட்படுத்தமாட்டார்களென நம்புகின்றோம். நம் கம்பருக்கும்ஷேக்ஸ்ப்பியருக்கும் கலைநலத்திற்கும் தத்துவ உணர்விற்குந் தேதி யில்லை. ஆயினும் 1933வது ஆண்டில் இக்கலாநிலயம் பிற்பட வேண்டி நேர்ந்த ஆறு மாதங்களில் மூன்றுமாதத்தினை வென்று மேற்சென்றிருக்கின்றது. இனி, இறைவனது அருளினோடு, நம் நண்பர்கள் தம் சந்தாக்களை அனுப்பிவைக்கும் விரைவினாலும், புதிய சந்தா நண்பர்களை அவர் ஊக்கமுடன் சேர்த்தளிக்கும் உதவியாலும் எஞ்சி நிற்கின்ற இம் மூன்றுமாதங்களையும் கடிதுகைக்கொள்ள முயல்பவராவோம்.

கால தேச வர்த்தமானங்களைக் கடந்தவோர் நிரந்தரமான மெய்ம்மையிலே கண்வைத்திருப்பது இக்கலாநிலயம். புதியபுதிய வர்த்தமானங்களைப் புகுந்து புகுந்து படிப்பதால் விளையும்பயன் ஒன்றுமில்லையே. அமரிக்கா தேயத்து அறிஞர் ஹென்றி தோரூ (Henry Thoreau) என்பவர், 'Read not the 'Times'; read the Eternities" என்று எழுபது ஆண்டுகளுக்குமுன் சாற்றினார். வர்த்தகச் செய்திகளோடு அரசியல் முழக்கங்களும், கொலை களவுக் கூக்குரல்களும், சீர்திருத்தச் சிறல்களும், வழக்கு விசாரணைகளும், இவையனைத்தும் மனிதனது மனதைக் கலக்கி அவன் கண்களை மங்கச்செய்கின்ற சில முயற்சிகளே ஆகுமென்று முறையிடுவோர் தோரூஒருவரேயல்லர். அறிவினது ஒளியைப் பெற்று ஆன்ம அமைதியை நாடியுள்ள, ரால்ப் வால்டோ எமர்ஸன் முதல் எத்தனையோ பலர், இந்த உண்மையை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி யிருக்கின்றனர். இதற்கெதிர், "உலகத்தில் அவ்வப்பொழுது நிகழ்கின்ற செய்திகளையெல்லாந் தெரிந்துகொண்டு அவ்வுலகத்தினோடு நம்மை ஒற்றுமைப்படுத்திக்கொள்ளவேண்டாவோ ?" என இக்காலத்து மக்கள் பலர் கேட்பார். உலகத்தினோடு ஒவ்வொருவரும் ஒற்றுமைப்படும்படி வாழவேண்டும் என்பது உண்மையே. கொள்கை சீரியதேயாக, செய்கை பிறழ்ந்து அக்கொள்கையைச் செலுத்தும் விபரிதத்திற்கு இவ்வாசகம் ஏற்றவோர் உதாரணமாகும். உலகத்தோடு ஒற்றுமைப்படவேண்டும் என்னுமிது, உலகத்தின் மெய்ம்மைக்கு இணங்கும்படி ஏவுகின்றதேயல்லாமல், இக்காலம், பொய்வேடம் மிகுதிகாட்டி நடிக்கப்படும் கூத்துக்களில் கலந்துகொள்ளும்படி நம்மை அழைக்கவில்லை. இதனை மறந்தால் அப்புறம் எதனைப் படித்தும் எதனை நினைத்தும் எதனைச் செய்தும் பயனில்லை. ஆகையாற்றான் இப்பொழுது நடமாடுகின்ற மானுட முயற்சிகளில் மிகமிகப் பெரியன வெல்லாம் அந்தத்தில் அவலமே ஆகி முடிகின்றன. இந்தச் செய்திகளெல்லாம் நம்மைஇப்பிரபஞ்சத்தின் மெய்ம்மையோடு இணங்கச்செய்யாமல், பெரும்பாலும் நாம் அம்மெய்ம்மையைக்காணமாட்டாமல் நம் கண்களின் ஒரு திரையே இட்டுவைக்கும். தாம் அச்சிடப்படும் காகிதத்தையும் விட நொய்யதாகிய இவ்வர்த்தமானங்கள் மெய்ம்மையோடு நம்மை உறவுசெய்துவைக்க இயலும் என்னப் பேசுவ

தெல்லாம் வம்பே. பார்க்குமிடத்து, இவ்வர்த்தமானங்களில் புதுமையுமோ ஒன்றும் இல்லையே. இந்தப் போட்டியும், இந்தப் பகையும், இந்தப் பிரசாரங்களும், இந்தக் கொலையும், கொள்ளையும், இந்தச் சீர்திருத்தங்களும், இந்தத் தேர்தல் முழக்கங்களும் இந்தச் சட்டசபையின் வீரவாதங்களும், இந்த நீதிஸ்தல நிகழ்ச்சிகளும், எல்லாம் மிகமிகப் பழையன. மனித இனத்தின் புன்மை எவ்வளவு தூரம் போகக் கூடுமென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை எழுந்தபொழுதெல்லாம் எல்லாத்தேயச்சரித்திரங்களிலும் எல்லாக் காலங்களிலும், எதிரேவந்து சாக்ஷிசொன்னவைகள் அல்லவோ இவை. மனிதன் தனக்குக் கீழே தானே தாழ்கின்ற தடுமாற்றங்களைக் கண்டுங்கேட்டுங் கலங்குவானேன். "தனக்குத் தானே மேலாகத் தன்னை நிறுவிக்கொள்ளமாட்டாதவரையிலெத்துணை அற்பமானது இம்மானுடம்" (Unless above himself he can erect himself, how poor a thing is man!) என்று ஓர் ஆங்கில வித்தகர் கேட்கின்ற இக்கேள்வி ஒவ்வொருவர் செவியிலும் சுடச்சுட ஏறவேண்டுமே. மனிதன் தனக்கும் மேலாகத்தன்னை நிறுவிக்கொள்ளவேண்டிய இந்நிலையை நம்கவிவரர் இரவீந்திரநாதர், "மனுஷத்வம்" என்றழைக்கின்றார். அம் மனுஷத்வத்தின் தன்மையையுமதனை எய்தக்கூடிய நெறிகளையும் நனிவிளக்கி அவர் வங்காளி பாஷையில் எழுதியுள்ள ஓர் கட்டுரையை இவ்விதழ்களில் முன்னர் (7வது வால்யூம், 16வது 17வது இதழ்கள்) மொழிபெயர்த்துத் தந்திருக்கின்றோம். அத்தகைய கட்டுரைகள், படிக்குந்தோறும் புதிய புதிய அறிவும் இன்பமும் நன்மையும் அளிக்கும் செம்மையன ஆவதுடன், நாம் இங்கு விளக்க முயல்வதை நன்கு தெளிவித்திருக்கின்றமையாலும், நம் வாசகர்கள் அதனை இச்செவ்வியில் மீண்டுமோர் முறை எடுத்திங்கு ஓதிக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். நன்று; அந்த இலக்கணத்திற்கு உரியவனைத் தன்னினும் மேலானவொரு பதவியில் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட "மனிதன் ஒருவன் இவ்வுலகில் இல்லாமையால் அன்றோ இன்று இத்துணைக்கோடி மக்கள் இருக்கின்றனர்"—(It is for want of a man that there are so many men)—என்று ஹென்றிதோரு ஏங்கி நைகின்றார்.

பிரபஞ்சத்தின் மெய்ம்மையோடு தன்னை உறவு செய்துகொள்ள முயல்கின்றவனே மனிதனாவான், என இலக்கணம்வகுத்துக் காட்டுகின்றார் இரவீந்திரநாதர். இவ்வுறவிற்கு உதவி செய்வன, புதிதுபோல் புகுந்து பழைய பாழ்மையையே பரக்கப்பேசும் இவ்வர்த்தமானச் செய்திகளோ, ஒருபோதும் ஆகமாட்டா. மிகப் பழையனவும் மாறாமல் நிலைத்திருப்பனவும் ஆகிய செய்திகளேயல்லவோ ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகத் தோன்றி மனிதனைப் புனிதமாக்க வேண்டும். நாள்தோறும் சூரியனது உதய அத்தமனங்களிற் கருத்தைச் செலுத்திக் கண்ணுற்றால், அந்தக் காட்சி, பிரபஞ்சத்தின் மெய்ம்மையோடு நம்மை ஒற்றுமைப்படுத்தி நம் சித்தத்திலுள்ள பித்தம் அத்தனையுந் தெளிவித்துவிடுமே. இந்தக் காட்சிக்கு நமது கண்களைத் திறந்துவைப்பவர் புலவர் பெருமக்கள். வோர்ட்ஸ்வோர்த், கீட்ஸ், ஷெல்லி போன்றவர்கள், குருவியின் குரல்களில் புதுமைகள் கண்டு பிரபஞ்ச மெய்ம்மையினோடு தாம் இணங்கவருகின்ற ஊக்கத்தையும் உவகையையும் நம் மனத்தினுள்ளும் புகட்டுவார். ஓர் எலியின் ஓட்டத்தில் புதுமையும் மெய்ம்மையின் பொருளுங் கண்டான் ராபர்ட் பர்ன்ஸ். புல்லின் இதழ் அனைய பொருள்களில் புதுமை கண்டு பிரபஞ்ச பிரஞை எய்தியவர்களில் வால்ட் விட்மன் ஒருவர். இப்படியே, ஒரு சொல்லும் அந்தச் சொல்லிற்கு ஒரு பொருளும் உடன் நிகழ்கின்றதென்பதைப் புதிது கண்டுபிடித்து மெய்ம்மையைத் தழுவிக் கொள்வான் அக்காளிதாஸன். மாதர்தம் நுடங்கும் இடையில், அசையும் ஓர் மலரில், திரளும் மேகத்தில், பெய்யும் மழையில், பிரபஞ்ச மெய்ம்மையைத் தாம்பெற்று நமக்களித்து உவப்பவர் கம்பரனைய புலவர்பெருமக்கள் எத்தனையோ பலர்.

வர்த்தமானச் செய்திகளெல்லாம் பழைய பழைய புன்மைகளையே புதனமெனப் பகர்ந்து நம்முடைய புந்தியை ஓயாதுஉழக்கிஉழக்கி மெய்ம்மையை அவிக்கின்றஒருதொழிலையே தம் கடமையாகப் பூண்டிருக்கின்றன. இதனால், நாம் நமக்கே அயலானபின் வேறு யாருக்கு உறவாகப் போகின்றோம்! நம்மையே நாம் இழந்து நிற்கின்றோமெனின், பிறகு இவ்வுலகமே வெடித்து அழிந்தால்தான் நமக்கென்ன! அல்லது இமயமலையின் சிகரமும், பனிக்கடல் பரப்பும், வேறு பல அண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டாலுந்தான் நமக்கென்ன! நம்மையே இழந்தபின், உலகம் அழிந்தாலும், நாம் இழப்பதற்கு மேலொன்று மில்லையாகையால் ஒன்றும் கவலவேண்டா! நம்மையே இழந்தபின், புதிது கண்டுபிடிக்கப்படுகின்ற அண்டங்களால், பெறுவதற்கு ஒன்றுமே இல்லையாகையால், நாம் மகிழவும் வேண்டா. இழந்ததன் அருமையையும் தாம் பெறவேண்டிநிற்பதன் பெருமையையும் அறியாதார் சிலர், மறந்தார் சிலர், அறிந்தும்ஒன்றும்அறியாதார்போலும் மறந்தார்போலும் விவகரிப்பார் சிலர், இழந்ததை மீண்டும் இவ்வுலகில் எய்துதற்குஇயலாதென நினைத்து மனமுங் கையுஞ் சோர்வார் சிலர். இன்னவர்க்கெல்லாம் கைத்துணையாய் அமைதல் வேண்டும் என்னுமொரு நினைவினோடு இக் கலாநிலயம் நிலவுகின்றது. இவ்வுதவி புரியவேண்டுமென்னும் ஆசை ஒன்றுதான் எம்முடையது. மற்று, அவ்வுதவியை நிகழ்த்திவைப்பதற்கு எம்முடைய அறிவு ஆற்றல் ஆராய்ச்சி யொன்றையும் நாம் முன்கொணர்ந்து நிறுத்தாமல் காத்துக்கொள்கின்ற தன்மை எமது வாசகர் தெரிந்து பாராட்டுவார்களென நம்புகின்றோம். எம்மனோர் அறிவும் ஆற்றலும் கல்வியும் செல்லக்கூடிய தூரம் மிகச் சிறியதே. மற்று, உலகத்தின்கண் உத்தம வித்தகர்களென்று மதிக்கப் பெற்று அறிவின் ஆட்சியில் நிரந்தரமானவோர்இடந் தமக்கு நிறுவிக்கொண்டிருக்கின்ற மேன்மையோர்நன்மொழிகளைப் பெயர்த்தெழுதி விளக்கிக் காட்டுவதல்லாமல் எம்முடைய பொறுப்பில் யாம் மேற்கொண்டிருப்பது யாது மில்லாமையை இவ்விதழ்களைப் படிப்பவர்எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

மெய்ம்மையை நாடி யடைந்து பிரபஞ்ச உணர்வுடன் கலந்துவாழ்வதே மனிதத்தனம் ஆகும் என்றும், தற்கால மானுடமுயற்சிகள் அனைத்தும் அவ்வாழ்க்கையை நாம் காட்சிகொள்ளாவண்ணம் நம்முடைய கண்களை மறைக்கின்ற தீமையேசெய்கின்றன வென்றும் மேலே கூறினோம். இதனின்று சிறிது வேறுபட்டு, இம்மானுட நடமாட்டங்களும் இறுதி

யில், அம்மெய்ப்பொருளைத் தேடிச்செல்கின்ற வழியிலே தமக்குந் தெரியாமல் விளைகின்ற சில கோலாகலங்களையன்றி வேறில்லை என்ன ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் அவர்கள், 'தனவணிகன்' பத்திரிகையில் எழுதியவோர் கட்டுரையை இங்குஇதன்கீழ் எடுத்துத் தருகின்றோம். "பாவம், இம்மனிதனை மன்னித்துவிடுங்கள்" என மன்றாடுகின்றார் அவர். "ஆம், அம் மன்னிப்பைத் தருவதற்கும்பெறுவதற்கும் உரியவன் ஆகவேண்டுமே இம் மனிதன்" என்ன யாம் எதிர்விளம்பி, அதற்கு ஏற்றவைகளை ஊக்கமுடன் சாதிப்பதற்கே அனைவரையும் பரிந்தழைக்கின்றவர்களாய் நிற்கின்றோம்.

---

# பொதுமையின் அதிசயம்

ஆச்சரியமானதொன்றை எடுத்து ஆராய்ந்துகூறிச் சாதாரண மாக்கிவிடுவது மிகச் சுலபம். ஐயாயிரம் மைல்களுக்கப்பால் ஒருவன் பேசுவதை நாம் ரேடியோவின் மூலமாகக்கேட்கின்றபோது எப்படித்தான் இது இயன்றதோவென்று அடங்கமாட்டா ஆச்சரியங் கொள்கின்றோம். ஆனால் அந்த எந்திரத்தினது அமைப்பையும் அதனை இயக்குகின்ற ஓர் சக்தியின் தன்மையையுங் கற்றுக்கொண்டபின் இவ்வளவுதானே இது என்று எண்ணும்படி ஆகிவிடுகின்றது. இதற்கெதிர், சாதாரணமானதொன்றை அதுஅதிசயத்திலும் அதிசயமாய்த் தோன்றும்வரையில் அதனிடத்தில் நம்முடையகவனத்தைச் செலுத்திவைக்கப் பயில்வதே கஷ்டமாம். இதுவே உண்மையான பயனைத் தரத்தக்கது.

மேல்நோக்காகப்பார்க்கும்பொழுது மனிதனுக்கு, மனிதனைக்காட்டிலும் சாதாரணமானது வேறொன்றுமில்லை. அதனிலும், ஒவ்வொருவனுக்கும் தன்னை விட்டு ஒரு கணமேனும்பிரியாமல் தன்னுடன் உழல்வதுதான். உறங்கும்போதும் தன்னை மறக்கத் தரியாமல் கனவின் மூலமாக உறவுகொள்கின்றான். பிறக்கின்றான், உண்கின்றான், வளர்கின்றான், பொருள் ஈட்டுகின்றான் கொடுக்கின்றான் கரக்கின்றான், கவர்கின்றான் களவு கொடுக்கின்றான், நகுகின்றான் அழுகின்றான், வருந்துகின்றான், வருத்துகின்றான், வெகுள்கின்றான், மணக்கின்றான், மக்கட் பெறுகின்றான், பெறாமல் தடுக்கின்றான், இறக்கின்றான். இன்னவைகளுக்கு ஆளாகும் ஒன்று "மனிதன்" என்று பெயர் எடுத்திருக்கின்றது. அந்தத் தொழில்களும் இந்தப் பெயரும் எல்லாம் சாதாரணம்.

ஆயினும் இந்த மனிதனைச் சற்று ஊன்றிப் பார்ப்போம். பச்சைப் பிண்டமாய்த் தோன்றிப் பிடிசாம்பராய் முடிகின்ற ஒரு அற்பச் சரித்திரத்திற்கு இலக்காவதேயோ இம் மனிதன் கதி! தானே அழ அழப் பிறந்து தன் உறவினர் அழ அழ இறக்கின்ற இந்தப் பிராணி என்ன எண்ணி என்ன செய்ய இப்படி நடமாடுகின்றது? இரண்டு கோடியிலும் இப்படி அழுகையை வைத்திருக்கின்ற இது, இடையிலே என்னதான் சாதிக்கக் கிடக்கின்றது! எத்தனை ஆசை, எத்தனை அழுக்காறு, எத்தனை கோபம், எத்தனை களிப்பு! என்றைக்கேனும் எவ்விடத்தேனும் எவனேனும் சுகப்பட்டானோ! ஆயினும் ஒவ்வொருவனும் தன் உயிரை விடாப்பிடியாய்ப் பற்றிக்கொள்கின்றான்; தற்கொலை புரிந்துகொள்வாரைக் கருதி ஆச்சரியப்படுகின்றோம். இந்த நிலையில் தற்கொலை புரிந்துகொள்ளாமல் தம் உயிரைச் சுமந்துகொண்டு திரிகின்ற ஏனையோர் அனைவரும் அன்றோ நமது ஆச்சரியத்திற்கு ஆளாகவேண்டும்! எதனைக்கொண்டு மனிதனை ஒரு பொருளாக மதிப்பது! "இப்பிறவி வேண்டா வேண்டா" வென்றே வித்தகர்கள் முதல் பாமரர் வரையில் யாவரும் கதறுகின்றனர். ஆயினும் "மற்று, ஏன் பிறந்தாய்" என்று ஒருவரையும் கேட்பதற்கில்லை. ஏனெனில், பிறந்தது அவன் பொறுப்பன்று; கர்ப்பத்தடைமுறைகளைக் கற்காத அவன் பெற்றோர் பிழை அது, உண்மையே! எனினும்இறந்தகல்வது, சட்டவிரோதமாயினும், இவன் கையிற்றானே இருக்கின்றது! மற்று, வெண்ணெ யிருக்க நெய்க்கு வருந்துவாருண்டோ! சட்டத்திற்கஞ்சியா? செத்தவன் மீது எச்சட்டமுஞ் செல்லாது. "செத்தபின் ஒருகால் தமக்கு இதனிலும் கொடியதோர் கதியே வாய்க்குமோ என்னுமொரு அச்சத்தினாற்றான் மனிதர் தற்கொலைபுரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர்; அல்லாக்கால், எவன்தான் தன்னுயிரைத் தாங்கிக் கிடப்பான்" என்று கேட்கின்றான் ஷேக்ஸ்ப்பியர் நாடக பாத்திரங்களில் ஒருவனாகிய ஹாம்லெட். இவன் உண்மையில்பித்தனோ அல்லதுபித்தன் போல் நடித்தானோ என்று ஷேக்ஸ்பியர்நாடக ஆராய்ச்சியாளர் சிலர் ஐயுறுவார். இந்தச்சொல் சொன்னவன் உண்மையில் பித்தனே என்பதிற் சந்தேகங் கொள்ளச் சிறிதேனும் நியாயமில்லைஎன்றுமதிக்கவேண்டி வருகின்றது. சாகத் துணியாதவன் சொல்கின்ற 'சாக்கு' இது. இம்மையில் இருக்கின்ற இந்தத்துன்பத்திற்கும் மேலான வொரு துன்பம் மறுமையில் எய்தக்கூடும் என்ற எண்ணமே தடைசெய்வதால்தான் தன்னை மாய்த்துக்கொள்ளாமல் இருக்கின்றான் இம் மனிதன் என்பது எத்துணையும் அனுபவத்திற்குப் பொருந்தாது. இப்படிப் பேசிய ஹாம்லெட் வெறும் பித்தனே.

சாகாமைக்குக் காரணம் எதுவாயினும், மனிதன் இத்துணை இடுக்கண்களுக்கிடையே வாழ்வதன்நோக்கம் யாதோஎன்றுஅறியமாட்டாமல் இருக்கின்றது. "To each his suffering, all are men condemned alike to groan" என்றனர் ஆங்கிலப் புலவர் க்ரே என்பவர். இதற்குச் சான்றுகளும் மேற்கோள்களும் வேண்டவும் வேண்டா. எனினும் ஒன்று. இந்த மனிதர்களையெல்லாம் படைத்த கடவுளே இராமனெனப் பெயர்கொண்டு மனிதனாகப் பிறந்தபோது,

ஆய்வுறு பெருங்கட லகத்து ளேயவன்
பாய்திரை வருந்தொறும் பரிதற் பாலனோ
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயாம்
நோயுறு துயரென நுடங்க னோன்மையோ

என்பானேல்இப்பிறவியை நம்மனோர் வெறுக்காமல் இருக்கும் வகையுண்டோ. சீதையை இழந்து வருந்திய இராமன், தன் அருமைமிக்க தம்பி இலக்குவனையும் இழந்தானென்றுஎண்ணித் துயரந் தாங்கமாட்டாமல் தற்கொலை புரிந்துகொள்ள முயன்ற சிறிது

நேரத்திற்குள், பிறவித்துயரை இன்னபடி எடுத்துப் பேசுகின்றான் என்பதையும் எண்ணுங்கால், மனிதன் தன் உயிரைப் பிடித்துக்கொண்டிருக்கிற கொள்கையின் அதிசயம் நன்கு புலப்படவேண்டும்.

எல்லாவற்றினும் ஆச்சரியமானது எது என்று யக்ஷன் கேட்டபோது, தருமபுத்திரன், “இறப்பதே நிச்சயமும் சாதாரணமுமாகஇருக்க ஒருவன் இறந்தால் மற்றவர்கள் அந்நிகழ்ச்சியை ஏதோ அதிசயம் போல் பாராட்டுகின்றார்களே; அதுதான் எல்லாவற்றினும் ஆச்சரியமானது” என்று எதிர்விளம்பினான். மற்றுச் சாவது இத்துணைச் சுலபமும் சாதாரணமுமாக இருக்க, “தீவினைப் பிறவிவெம் சிறையிற்பட்டவர்” தம்மை மாய்த்துக்கொள்ளாமல் ஏன் இப்படி யுழல்கின்றார்களோ தெரிந்ததில்லையே, அதுதான் எல்லாவற்றினும் ஆச்சரியமானது” என்று பதில்சொல்லியிருப்பானாயின் தருமபுத்திரனது மதிநுட்பம்பின்னும் பலபடி பாராட்டக்கூடியதாக நின்றிருக்கும்.

எனின், மனிதன் உயிரோடு நடமாடுவதைவிடச் சாதாரணமானது இவ்வுலகில் வேறொன்றில்லையாக, மற்று உற்றுநோக்குங்கால் அதுவே இத்துணை அதிசயமாகி ஆச்சரியப்படும்படி முடிகின்றது.

மனித வாழ்க்கை இப்படியாயிற்று. இது ஒருபுறமிருக்கட்டும். மனிதத் தன்மையைப் பார்த்தாலோ அதுவும் ஒன்றும் பாராட்டுவதற்கு உரியதாக இல்லையே. உயிர்வளர்ச்சிமுறையில் குரங்கின்பரம்பையில் தோன்றியது இம் மனிதஇனம் என்று டார்வின் அனைய உயிர்நூல் ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இதுகொண்டு, “குரங்கினின்று மாறியவர்களா நாம்!' என மனிதர் தம் குரங்கின் முன்னையோரைக் கருதி மானமழிந்து நிற்கின்றார். எனினும், விற்றும் வாங்கியும், உண்டும், பெண்டுகொண்டும், வலியோருக் கொடுங்கியும், மெலியோரை நலிந்தும், நன்றியைக்கொன்றுதின்றும், நான்நான் எனத் தருக்கிச் செல்வத்தின்போகங்கள்தான்மானுடச்சாதனையென்று ஒன்றைவிட்டு ஒன்றுபற்றித் திரிகின்ற இம்மனிதனைக் காண்கின்ற குரங்குகள், “நல்லவேளை, நாம் இவ் வற்ப மனிதர்கள் ஆகாமல் தப்பினோமே” என்னக் களிகூர்ந்து இருக்கவில்லை என்பது நிச்சயம் அல்லவே, என்று மேரியன் க்ராபர்ட் என்னும் ஆங்கில நூலாசிரியர் ஒருவர் எழுதியிருப்பது சாலச் சிந்தித்தற் குரியது. இவ் வாங்கிலநூலாசிரியர் இன்று சொல்கின்ற வார்த்தை இது. இதற்கிணையாக நமது பண்டைய தமிழ் இலக்கியங்களிலுமுளது. கச்சியப்ப சிவாசாரியார் தம் கந்தபுராணத்தில் எண்ணரியநுட்பம் வாய்ந்த காட்சியொன்று காட்டுகின்றார்:—

பாதிமதி சடையணிந்த பரமன் உமையினோடும் வந்தருளி ஓர் கூவிளந்தருவின் நிழலில் தங்கியபோது அம்மரத்தின் மீதிருந்த ஓர் குரங்கு தனக்குரிய குறும்பு மதியால் தழைகளைப் பறித்து அவர்மீது தூவுதலும் சுந்தரி சிறிது சினந்தனள் நோக்க வெருவிய அவ்வானரம் விதிர்ப்புற இழிந்து ஐயனையும் ஆய்தனையும்ஆர்வமொடு வணங்கி, அடியனேன் பிழைபொறுத்திர் என இரந்தது. அப்பொழுது,

பிழையிதென வச்சமொடு பேசலெமை யீண்டே
விழுமியதோர் கூவிளையின் மெல்லிலைக ளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குல முதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தான்

குரங்கிது செய்தது சேட்டையே யானாலும், தான் உகந்த வில்லுவத்தின் தளிர்களா லர்ச்சிக்கப்பெற்ற இக்கறைமிடற்றிறைவன் அதற்கீடாக, “நீ மனுகுலத்தில் மனிதனாகப்பிறந்து உலகம் முழுவதையும் ஆள்வாய்” என்றோர் வரமருளினான். குரங்கிற்கோ இது சாபமாகத் தோன்றியதே யன்றி வரமாகத் தோன்றவில்லை. ஆப்பைதனை அசைத்ததனி லரியதோர் இடுக்கண் இச்சேட்டையால் எய்தியதென மாழ்கி “யான் செய்தபிழையோ மிகச் சிறியதாக, அதற்கு மனிதனாகவே பிறக்கவேண்டும் என்னும் அத்துணைபெரிய சாபத்தை இட்டுவிடலாமோ” என மன்றாடி,

நுங்களை வைகலு நோக்கி யுவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்

எனப் பாவம் அப்பேதை வானரம் பரிந்து இரந்தது. மனிதனாயின் பின்னர் உய்கை இல்லை என்பது அக்குரங்கிற்கு நிச்சயம். எம்பெருமானோ அதனை அன்புடன் நோக்கி “நின் உள்ளந் தூயது, யாதும் வருந்தாதே, நிலத்திடைச் சிலநாள் அரசிருந்து பின்னிங்கு மீள்வாய்;” என்று தேற்றினும் ஆற்றாமல் அக்குரங்கு,

பொய்ம்மறை யான புலானுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற முறாதே
இம்முக னோடற வெற்கரு ளென்னா
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே.

என அச்சிறு சரிதத்தை முடிக்கின்றார் புலவர்பெருமான் கச்சியப்ப சிவாசாரியார். “மனிதனின் முகங்கொண்டு நான் கடவுளுக்கு ஆளாவதெங்ஙனம்” என அஞ்சி, குரங்கின் முகமே சாலச் சிறந்ததோர் காப்பு என்று எண்ணிய அம்முசுகுந்தனது வேண்டுகோளைவிட மனிதனது அவமானத்திற்கு வேறினி என்ன வேண்டும்! இந்தஅவமானத்தை ஒருவாறுபோக்குவதற்கு முயன்ற கம்பர்பெருமான்,

தேறின னமரர்க் கெல்லாந் தேவராந் தேவ ரென்றே
மாறியிப் பிறப்பில் வந்தார் மானுட ராகி மன்னோ
ஆறுகொள் சடிலத் தானு மயனுமென் றிவர்களாதி
வேறுள குழுவை யெல்லா மானுடம் வென்றதன்றே.

என்று இராமனைக் குறித்து வேறோர் குரங்காம் சுக்கிரீவன் சொல்லும்படி வைத்திருப்பது உண்மையேயானாலும், இன்னமும், முசுகுந்தன் சுமத்திய அப்பரிபவப்பொதியினின்று மனிதன் தலைநிமிரமாட்டாமல் இருக்கின்றான் என்றே மதித்தல் வேண்டும்.

குரக்கினத்து இம்முசுகுந்தன் அன்றியும் அரக்கர்குலச் செம்மல் அக் கடோற்கசன், ‘அரக்கிமகன்’ என்றுதன்னை இழித்துக்கூறிய துரியோதனனை முன்னிட்டு, அரக்கர்கள்,

செழுந்தழல்வாழ் மனைகொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணார்
அழுந்துமனத் தழுக்குறா ரச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
மடைவித்துக் கொல்ல வெண்ணார்
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
மடிகளுக்கே வேற்ப வென்றான்.

“மானுட அடிகளே, நீங்கள் இவ்விழிதகைத் தொழில்களைப் பூண்டிருப்பதாற்றான், அரக்கரேயாகிய எம்மினின்று வேறாக நிற்கிறீர்” எனக் கடோற்கசன் கழறி

யது துரியோதனனை மட்டுமே சாருமென அமைதற்கில்லை; எல்லா அடிகளுக்கும் இது ஏற்கும்.

குரங்கும் அப்படிக் கூறுகின்றது அரக்கனும் இப்படி அறைகின்றான். இனி, குலத்திற்குள்ளிருந்தே இம்மனிதனை ஏசுவார்எத்தனையோபலர். இன்னவர்களில் ஒருவர்,தற்காலம் தனக்குநிகரில்லாச் சிந்தனையாளர் என்றபெரும் புகழுடன் ஓங்குகின்றவித்தகர் ஜான் கூபர் பாய்ஸ் என்னும் அமெரிக்க ஆசிரியர். "நாம் மீன்களல்ல, ஆடுகள் அல்ல, நரிகள் அல்ல,புலிகள் அல்ல, பேய்கள் அல்ல, இவைகளை யெல்லாம் விடக் கேடுகெட்டவர்—மனிதர்" என்பார் என்றால் அப்புறம் பல பேசுவானேன்.

நன்று; மனிதவாழ்க்கையோ அத்துணை அவலமானது,மானுடத்தன்மையோ இத்துணை இழிவானது; இதன்மேல், பொதுமையிற் பொதுமையாகிய இம்மனிதன் இன்னுந் தன்னை மாய்த்துக்கொள்ளாமல், உயிரை நச்சி நடமாடுவதன் அதிசயத்தினை அரிதின் அறியவேண்டாவோ! புலையாம் பிறவி பிறந்து என் செய்தார்? இதனினும் அதிசயம் இன்னுமொன்று உளது. இத்துணை அவலமும் இழிவும் இயற்கையாயிருக்க "அரிது அரிது மானுடராதல் அரிது" என்கிறார்களே சில சான்றோர். இன்னார் என்ன நினைத்து என்ன சொல்கிறார்? "அரிதரிது மானுடராதலரிது" என்னும் இவ்வாசகமோ பொதுமையிற் பொதுமையானது. நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பது கட்டுரையாளர் வாயில் இது தவறாமல் வரக் காணலாம். எனினும், முன்னே கூறியவைகளை நினைக்கும்போது, இவ்வாசகத்தை ஊன்றிச்சிந்திக்குமளவும்,எவ்வகையில் இம் மனிதப்பிறவி அரிது என்னும் அதிசயமே அதிகமாகின்றது.

இத்தகைய பலஅதிசயங்களுக்கிடையே, வேறோர் பொதுமை மிகமிகப் பெரியதொரு ஆச்சரியமாகத் தோன்றி எழுகின்றது.அதனையுஞ் சிறிதுஆராய்வோமாயின் இக்கட்டுரையின்பொருளும் பயனும் தெரியவரும்.

கடவுளென்னுங்கருத்து மிகப்பொதுமையானது. வேறு எது தெரியினும் தெரியாவிடினும் இவ்வுலகம் அடங்கலும் உள்ள மாந்தர் அனைவருக்கும் கடவுள் எனும் அந்தப்பெயர் தெரியும். மிக இழிந்த இம்மனிதன் மிகப்பெரிய அப் பெயரை எங்ஙனந் தெரிந்துகொண்டான்! இந்த அதிசயத்தை எடுத்துக்காட்டியவர் ரஷ்யா தேசத்து நூலாசிரியர்களில் ஒருவராகிய டாஸ்ட்டவிஸ்க்கி என்பவர். கூறுகின்றார் அவர்:—

What would be marvellous is not that God should really exist; the marvel is that such an idea, of the necessity of God, could enter the head of such a savage, vicious beast as man. So holy it is, so touching, so wise and so great credit it does to man.

"இத்துணை மூர்க்கமும் குரூரமும் வாய்ந்த இந்த மனிதன் என்னும் மிருகத்தின் தலையில், அத்துணைப் புனிதமாயதும் மேன்மையானதும் ஆகிய கடவுளின் அவசியத்தைக் கண்டுகொண்ட கருத்திது எப்படித்தான் நுழைந்ததோ, அடங்கமாட்டா ஆச்சரியமாக இருக்கின்றதே இது! எத்துணை பேரறிவு சான்றது! எத்துணை பெரிய பெருமையை இது மனிதனுக்குச் செய்து வைக்கின்றது!" என வியக்கின்ற அவ்வாசகத்தினுள் மனிதப்பிறவி அரியது ஆவதன் இரகசியம் அடங்கியிருக்கின்றதென்பதை இனிஇயம்பல்மிகை.

டாஸ்ட்டவிஸ்க்கி கூறும்வண்ணம் கடவுள் என்னுங் கருத்தே மனிதனுக்கு அத்துணைப் பெருமையளிக்கின்றதென்றால் அக்கடவுளைக் கண்டுகொண்டபின் இம்மனிதப்பிறவியின்பெருமை மாத்திரமன்றி அதன் அருமையும் தெரியவரும்.இந்தக் காட்சிக்குத்தான் அவாவி அலைகின்றது இம் மானுட மனம்.—தன்னினும் பெரியதொன்றைத் தான் தேடும் இப்பரபரப்பே, பொருளென்றும் புகழென்றும் அதிகாரம் என்றுந் தோன்றி மனிதனைப் பிய்த்துத்தின்கின்றன. உண்மையில் இவன் நாடுவன இவைகளல்ல. அவைகளெல்லாம்விட மேலாய நிரந்தரமான தொன்றைத் தேடியடையவே தடுமாடுகின்றது இவன்மனம். அது தெரியாமல், மண்ணாலும் பெண்ணாலும் பொன்னினாலும் அம்மனத்தை நிறைத்துக்கொண்டுவிடலாம் என வீணே எண்ணி அலைவதாற்றான் இவ்விபரீதங்களெல்லாம்விளைந்து ஒருகெட்டபேரும்எடுக்கின்றான். எடுப்பது கெட்டபேரானாலும், இந்த அல்லலே அவனது ஆன்மாவினதிசயத்தைக் காட்டித்தருகின்றது. "மனிதவாழ்க்கை மிகவும்அற்பமானதென்றே வைத்துக்கொள்வோம். மற்று, அது அற்பமானது என்பதைத்தான் நாம் தெரிந்துகொண்டது எங்ஙனம்? இந்த அவலத்திற்கும் அதிருப்திக்கும் ஆதாரம் என்ன? எல்லாரும் ஒருபடித்தாய்உணர்கின்ற குறையும் அறியாமையும், நம்முடைய ஆன்மாவானது தனது மிகப்பெரிய உரிமையைக் கேட்கின்றவோர் நுட்பமான குறிப்பேயன்றி வேறு யாவதாயிருத்தல்கூடும்" என்று இக்கருத்தை அமெரிக்க வித்தகர் எமர்ஸன் என்பவர் அழகுறவிளம்புகின்றார். எனின், அலகிலா நிரந்தர நிலையின் நினைவு நம்மில் வேரூன்றிஇருத்தலாற்றான், அலகும் அழிவும்உடையது நம்முடைய வாழ்க்கை என்னும்எண்ணம் நம்முளிடைவிடாமல் தோன்றலாகின்றது என்பதிலோ யாதும் ஐயமில்லை. ஆதலின், "தேடிக் கண்டுகொண்டேன்,திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத்தேவனை யென்னுளே தேடிக் கண்டுகொண்டேன்" என்று நம் பெருந்தகை திருநாவுக்கரசருடன் பாட வல்லோமாயின், இவ் ஆக்கையாற் பெருதற்குரிய பயனைப் பெற்றவர்களாவோம்.

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே.

—"தனவணிகன்"

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[7-வது வால்யூம், 793-வது பக்கத் தொடர்ச்சி]

வேசியி லாசையாற் சிரிக்குஞ் சித்திரம்.

தன்னையே தமர்க்குநல்கும் முழுமுதற்பொருளின் இன்னருளினால், கவிகுலத்து அரசாம் அத்தனிப் பெருந்தகை வாலி, வானுக்கு அப்புறத்து உலகனாக, அவன் தம்பி சுக்கிரீவன் மண்ணரசு எய்தி வைகுமந் நாள், அவன் தன் வானரப்படையினோடு சீதையைத் தேடுவதற்கு வருங்காலம்எதிர்நோக்கி இராமபிரான், இலக்குவனுடன், மதங்கனது இருக்கையாகிய இருசியமூக பருப்பதத்தின் ஒருசிறை அமர்ந்திருந்த அப்பொழுது,

நண்ணுத லருங்கட னஞ்ச நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காட்சி காணலாய்
விண்ணக மிருண்டது வெயிலின் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தன தழைத்த மேகமே.

[ஆகாயமானது, பாற்கடலினின்று தோன்றியதும்,நெருங்குவதற்கு அரியதும் ஆகிய விஷத்தை விழுங்கிய,நெற்றிக்கண்ணனாகிய சிவபிரானது கழுத்தின்தோற்றத்தைத் தன்னில் காணும்படி, கறுத்தது; சூரியனது உஷ்ணமான கிரணங்கள் குளிர்ச்சியடைந்து இளைத்துப்போயின.]

என்று கம்பர், மழைக்கால வருணனையைத் துவக்குகின்றார். இதுகாறும் இவர்வகுத்துரைத்துள்ள வாலிவதைத்தத்துவமும், சுக்கிரீவன் அரசியலைமேற்கொள நேர்ந்தசெய்தியும் கருதற்குஅரிய அருமைவாய்ந்தன. புலமையின் எல்லையையும் தத்துவஉணர்வின் சிகரத்தையும், கடவுளின் திறத்தில் இம் மானுடமனங்கள் கொள்ளவல்ல ஐயங்களின் முடிவையும் அவைகளிற் காணலாம். தன் உயிரையும் உணர்வையும் அறிவையும் நுண்ணியபுலமையையும் கலையின்காட்சியையும், தருமம்வேறிலா இராமன்கைச்சரத்தின்பாலும், அந்நெறி அறிந்துகொண்ட வாலியின்மனத்தின்பாலும், அதனைச் சொல்லியும்உணரமாட்டாச் சுக்கிரீவனது நிலையின்பாலும், சலிக்காத ஊக்கமுடன் செலுத்தி, உயிர்ப்பதற்கும் அமையாத உள்ளக்கிளர்ச்சியுடன் இதுகாறும் உற்றுரைத்துவந்த கம்பர் இனிச் சற்றே இளைப்பாற அவாவினாரென்னும்படி, கார்காலத்துச் செய்தியை வருணிக்க ஐம்பது செய்யுள்கள் அமைந்துள. எம்பெருமான் இராமபிரானது கால்வண்ணங் கண்டவர் தனித்தனி உய்வாராயினும், "இனி இந்த உலகுக்கெல்லாம் உய்வண்ணமன்றி வேறோர் துயர் வண்ணம் உறுவதுண்டோ" என்னவே விளம்பும்படி உலகடங்கலும்ஒருங்கே அறிந்து உய்யுமாறு இராமபிரான் தன் மெய்வண்ணத்தை வாலியின் திறத்திலே காட்டிய ஓர் நுண்மையைக் கற்றுத் தேர்ந்துகொள்ள வல்ல புண்ணியஞ்செய்திருப்போர், இப்புலவர்பெருமான்கம்பருக்குச் செலுத்தவல்ல கைம்மாறு காணலரிது. முன்னே அகலிகையின்பால் தன் கால்வண்ணத்தையும், தாடகை கரன் அனையவர்பால் தனது கைவண்ணத்தையும், வாலியின் திறத்தில் தன்மெய் வண்ணத்தையும் காட்டிய இவ் விராமபிரான், பின்னர் இனி இராவணன்பால் காட்டுவதற்கு எவ்வண்ணம் வைத்திருக்கின்றானோ யாரறிவார்! கம்பர்வந்து விளம்புமளவும் நாம் காத்திருப்பதல்லால் வேறு கதியில்லை. முன்னே அத்துணை சொல்லிப் பின்னே இத்துணை சொல்ல விருக்கின்ற வொரு புலவர், அமைதியுடன் அமர்ந்து இளைப்பாறியவாங்கே ஆகாயத்தை நெடிதுநோக்கி யமர்தலுந் தகும்! அன்னவர் கண்களின்முன், வானம், கண்ணுதல் கண்டத்தின் கறுத்தது. இக்கருமையைக்காணும் இவர் மனத்திற் பின்னும் சில எண்ணங்கள் எழ,

நஞ்சினி னளிர்நெடுங் கடலி னங்கையர்
அஞ்சன நயனத்தி னவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினி னிருண்டது நீல வானமே

[நீலநிறம்பொருந்திய அவ்வாகாயமானது, விஷத்தைப் போலவும், குளிர்ந்த பெரிய கடல்போலவும், மகளிர்தம் மையிட்ட கண்போலவும், அவிழ்ந்த அவர் கூந்தல்போலவும், வஞ்சனையுடைய அரக்கர்களின் உடம்புபோலவும், அவர்செய்கின்றசெய்கைகளைப்போலவும், அவர்தம் நெஞ்சினைப்போலவும், (கருமேகங்கள் பரவியதனால்)கறுத்துத் தோன்றிற்று.]

என்று பேசுகின்றார். இதுவே யொருவகையில் ஏசுவதும் ஆகும். உயிர்களைக் காப்பதற்குத் திருநெடுமாலின் நிறமேதாங்கி வருகின்ற மேகங்களை, நஞ்சிற்கு ஒப்பாக நவில்தல் நன்றன்று என மதித்தலும் ஏற்புடையதே. எனினும், நிறத்தினாலன்றித் தொழிலின் ஒற்றுமை இல்லாமையை நினைவுபடுத்தற்கு, சிவபிரானது கண்டத்தமர்ந்து தன் வேகமத்தனையும் ஒடுங்கிய நஞ்சினையே முன்னர் இப்புலவர்ஒப்புக்கூறினார். பண்டைநாள், மழையின்றி வறண்டிருந்த உரோமபத நாட்டினுள், விரகறியா அக் கலைக்கோட்டுமுனிவன் கணிகையரை முலைக்கோட்டு விலங்கென்று கருதித் தொடர்ந்துவந்து காலடிவைத்தலும் முகிற்குலங்கள், "வானவன் களனமர் கடு" எனவே கருகின என்று சாற்றியுளராதலின், நிறத்தின் ஒற்றுமையை நினைக்குமளவில் தொழில்முடிவைமறந்து மேகத்தை நஞ்சமே ஆக்கிவிடுபவர் இக்கம்பர் அல்லர். நஞ்சின் வேகத்தை அடக்கிவைத்த "கண்ணுதல்கண்டத்தின் காட்சியே" தோன்றிற்று. ஆயினும்,இன்னணம் எண்ணியிருக்கும்போது, அவ்வெண்ணங்களின் தொடர்ச்சியாய் (association of ideas) அரக்கர் தன்மையையும் அதனால் இராமன் உற்றிருக்கின்ற நிலைமையையும் கம்பர் நினைப்பவராதலும் முறைமையே. இப்படி நினைக்குங்கால், இலங்கைச் சிறையில் சீதைபடுந் துயரும், அவளுக்கும் இராபிராமனுக்கும் இடையே கிடக்கின்ற கடலின் நெடுமையும், இவ்வளவிற்கும் காரணமாகிய வஞ்சனை அரக்கர்தம் வடிவும் செய்கையும் நெஞ்சும் எல்லாம் ஒருங்கே அவரது மனத்தில் திரண்டு எழுந்தன. இவ் வெண்ணத் தோற்றங்கள் அனைத்தையும் ஊடுருவிச்சென்றது வானம்காட்டிய அக்கருநிறம். அந்நிறமே ஒருபுறம் இராமனதுமேனியைத் தோற்றுவிக்கின்றது; மறுபுறம், அழுதழியும் சீதையின் கண்களையும்அவிழ்ந்துசரியும் அவள் கூந்தலையும் கம்பர்தம் கண்களின்முன் கொணர்ந்து நிறுத்துகின்றது. இடைகிடக்கும் கடலினை நினைப்பதற்குமக் கரியநிறமே காரணம். இக்கொடுமைகளை இயற்றியநிருதரை இந்நிறம்நினைப்பூட்டுதலும் இயற்கையே.

கம்பர்தம் மனத்தில் அவ் வரக்கர்பால் வெறுப்பும் சிறிதுசீற்றமும்சூழலாகின்றன. அன்னதோர் வஞ்சனைக் கொடுந்தொழில் தீமையோர் நிறத்தினைப் பூண்டுள இம்மேகத்தின் திறத்திலும் தம் வெறுப்பினைச் சிறிது செலுத்துவார்போல், முன்னே கண்ணுதல் கண்டத்தின் அமர்த்திய அந்நஞ்சினை வெளிக் கொணர்ந்து அதனிற்கே நேராக இம்மேகத்தைஒப்பாக்கி விடுகின்றார் என்ன மதிக்கவுந் துணியலாம்.

இவ்வகை நினைக்கின்ற நினைவுகளினின்று, இனி இராகவன், அவ்வரக்கர்களோடு புரிய நிற்கின்ற போரின் நினைவுகளும் கம்பர் மனத்தில் விளைவது இயற்கையாதலின், அம்மேகங்கள் வீசுகின்ற மின்னலை,

நாட்களி னளிர்கட ணீர நாவுற
வேட்கையிற் பருகிய மேக மின்னுவ
வாட்கைகண் மயங்கிய செருவின் வார்மதப்
பூட்கைக ணிறைந்தபுண் திறப்ப போன்றவே

[உரிய காலத்தில், குளிர்ந்த கடல்நீரை,நாவினால் மிகுதியாக விருப்பமுடன் குடித்த மேகங்கள் மின்னுகின்ற தோற்றங்கள், வாள்கள் ஏந்திய கைகள் கலந்து செய்யும் போரில், மதங்கொண்ட நீண்ட யானைகள் உடம்பில்பட்ட நிறைந்த இரணத்தைத் திறந்து திறந்து காட்டுவனவற்றைப்போன்று இருந்தன]

என்று வருணிப்பார். அம்மேகங்கள் இடி இடித்து முழங்குகின்றன. அதனை,

நீனிறப் பெருங்கரி நிரைத்த நீர்த்தெனச்
சூனிற முகிற்குலந் துவன்றிச் சூழ்திரை
மானிற நெடுங்கடல் வாரி மூரிவான்
மேனிரைத் துளதென முழக்க மிக்கதே

[சூல்கொண்ட கருநிறமமைந்த மேகக் கூட்டமானது, நீலநிறமுடைய பருத்த யானைகள் வரிசைப்பட்டுநின்றது போல நெருங்கி,சூழ்ந்திருகின்றஅலைகளையுடையகருநிறமுள்ள கடலின் நீரானது பெரிய வானத்தில் பரவியிருப்பதுபோல மிகுந்த முழக்கத்தைச் செய்தது]

என்று சாற்றுவார். மின்னியிடித்த வானம் பின்னும் மின்னுகின்றது. அதனைக் கண்ணுற்று,

அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி
விரிப்பவு மொத்தன வெற்பு மீதுதீ
எரிப்பவு மொத்தன வேசி லாசைகள்
சிரிப்பவு மொத்தன தெரிந்த மின்னெலாம்

[ஆகாயத்தில் வீசுகின்ற மின்னல்களெல்லாம், அரி என்னும் பெயரையுடைய இந்திரன் முதலிய தேவர்களினுடைய ஆபரணங்கள் ஒளி வீசுவனவற்றையும் ஒத்தன; மலைகளின்மீது நெருப்புப்பற்றிஎரிவதையும்போன்றன, பழிப்பில்லாத திக்குக்கள் சிரிப்பனவும் போன்றன]

என்னச் செப்புகின்றார். அரக்கர்தம் வாமும் வாழ்வும் வீழுநாள் வந்ததெனத் திசைகளெல்லாம் சிரித்தனவோ,யாதோ. கம்பருக்கும் அத்தகைய எண்ணந் தோன்றி யிருக்கலாம். தோன்றுதலும், சீற்றந்தணிந்து விளையாட்டுடைய சிந்தையராய், கருகிக் குமுறும் மேகங்களினிடையே தெரிந்த மின்னல்கள்,(ஏசு இல் ஆசைகள் சிரிப்பது போல்வதன்றி) வேசில் ஆசைகள் சிரிப்பது போன்றிருப்பதைப் பகர்ந்திருத்தலுங் கூடும். வேசியினிடத்தில் ஆசை வைத்த காமுகர், அவளைக் கண்டவுடன் பல்லையிளித்து நிற்கின்ற அந்நிலை சாலச் சித்திரச்சுவை வாய்ந்தது.வேசியரை வேசு என்னவும்,அவர்பால் ஆசைவைத்த காமுகர்களை ஆசைகள் என்னவும் இளிவரும்படி சொற்களை நிறுவிய இத்திறமை அச்சித்திரத்தின் அமைதிக்கு அரிதின் உதவிநிற்கும். இப்பொருளே கம்பர் மனத்தில் இருந்ததென வெண்ணும்படி பின் செய்யுளில்,

மாதிரக் கருமகன் மாரிக் கார்மழை
யாதினு மிருண்டவிண் ணிருந்தைக் குப்பையில்
கூதிர்வெங் கானெடுந் துருத்திக் கோளமைத்
தூதுவெங் கனலுமி ழுலையு மொத்ததே

[மழைக் காலத்துக் கருமேகமானது, திக்குக்களாகிய கருமான், எல்லாவற்றையும்விட இருண்ட ஆகாயமாகிய ஒரு கரிக்குவியலில், வேகமுடைய வாடைக்காற்றாகிய பெரிய துருத்தியின் வலிமையைக்கொண்டு ஊதிவளர்த்த வெப்பமுடைய நெருப்பின் சுவாலைகளை வெளிப்படுத்தும் உலைக்களத்தையும் ஒத்திருந்தது]

என்று, திக்குக்களுக்கு வேறு தொழிலுந் தன்மையுந் தந்திருக்கின்றார்.போரிற்குரிய படைக்கலன்கள் செய்வதற்கோ மாதிரக் கருமகன் உலைக்களம்எழுப்புகின்றான்! இப்படி, வானத்தின் தோற்றமனைத்தும், இராமன்நிலையையும் அரக்கர்அழிவையும் கம்பரது மனத்தின்கண் எழுப்பித்தருவது யாதும் வியப்பில்லை.இப்படலத்தின் முதற் செய்யுளிலேயே,

மாவியல் வடதிசை நின்று வானவன்
ஓவிய மேயென வொளிக்க வின்குலாந்
தேவியை நாடிய முந்தித் தென்றிசைக்
கேகிய தூதென விரவி யேகினான்

[சித்திரம்போன்றவளும், பிரகாசமுடைய அழகுவாய்ந்தவளும் ஆகிய தன்தேவியாம் சீதையைத்தேடும்படி,முன்னமே, இராமபிரான், தென்திசைக்கு அனுப்பிய தூதன் என்ன, சூரியன், பெருமை தங்கிய வடதிசையை விட்டுத் தெற்கிற்குச் செல்லலுற்றான்]

என்று மாரியின்வரவிற்குரிய தக்ஷிணாயநத்தின்செலவும் சீதையைத்தேடுஞ்செய்தியோடு சேர்த்தே பாடப்பெற்றிருக்கின்றது. ஆயினும், அதற் கடுத்த செய்யுளில், கதையின் சார்பினைச் சற்றேமறந்து,கார்காலம் முதிரமுதிர வானமானது மேன்மேல் கருகுகின்ற நீர்மையை,

பையணைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொற்றிரி
மையெடுத்த தொத்தது மழைத்த வானமே

[மேகங்கள் அடர்ந்துவருகின்ற ஆகாயமானது, படம் பொருந்திய பல தலைகளையுடைய பாம்பாகிய ஆதிசேஷனால் சுமக்கப்படுகின்ற செறிந்த இப்பூமியாகிய அகலில், முழங்குகின்ற கடலாகிய நெய்யில், மேருமலையாகிய அழகிய திரியில், சூரியனை விளக்குச்சுடராகக் கொண்டு, மை பிடிப்பதைப் போன்று இருந்தது]

என்று மிகமிக அரிதின் வருணிப்பா ராயினார். வானம் சிறிதுசிறிதாகக் கறுகி மாறுவதற்கு மையெடுப்பதனினும் பொருத்தமுடைய தோற்றம் வேறொன்றில்லை. அம் மையைப் பிடிப்பதற்கு இந்தப்புலவர், விளக்கு ஒன்று இன்னணம் கூட்டிக்கூட்டி யமைத்த நுட்பமும் வியக்கற்பாலதே.

# நகைச்சுவை

அகப் பொருளும் புறப்பொருளும் விரவிவரும் இலக்கியத்தின் முக்கிய பகுதியாகிய காவியங்களுக்கு இன்றியமையாத மெய்ப்பாடுகளை வகுத்துக் கூறுமிடத்துத் தொல்காப்பியனார் 'நகையை' எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகக் கொண்டார். எனினும்,

"கோட்டிய முகத்து.........
விட்டுமுரி புருவமொடு விலாவுறப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன......"

என்றபடி, நகைச்சுவை காரணமாக மெய்யின்கண் தோன்றுகின்ற வேறுபாடுகளையே மெய்ப்பாடெனக் கொண்டாரெனக் கொள்ளலே பொருத்த முடைத்து. மெய்ப்பாட்டினை வட நூலார் 'சத்துவம்' எனக் கூறுவர். நகைச்சுவை யுண்டாக்குதற் குரியபொருள் தோன்றிய வழியே இம்மெய்ப்பாடுகள் பிறக்கும். நகை, 'எள்ளல், இளமை, பேதமை, மடன்' என்னும் நான்கும் பொருள்களாகப் பிறக்கும் என்று தொல்காப்பியனார் கூறுவர். நகையை யுண்டாக்கும் ஒன்றனைச் சுவைக்கப்படும் பொருள் என்று உரையாசிரியர் கொள்வர். நகை யுண்டாக்கும் முறையில் இயற்றப்பட்ட பாடலோ அல்லது காவியமோ, படிப்போருக்குச் சுவைக்கப்படும் பொருளாகும். அவைகளை நகைச்சுவை ததும்பும் பாடலென்றும் காவியம் என்றும் கொள்ளுகின்றோம்.

நாடக காவியங்களில், பாத்திரங்களின் உள்ளத்து எண்வகைச் சுவைகளுள் ஏதாவது ஒன்றுபற்றி நிகழுங் குறிப்பும், குறிப்புக்கள் பிறந்தவழி உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய மெய்ப்பாடுகளும், உள்ளது உள்ளவாறே எடுத்துரைத்துக் கற்றோர்நெஞ்சம் களிக்கச்செய்தல், கவிகளுக்கு இன்றியமையாததோர் ஆற்றலாகும். எனவே தமிழிலக்கியத்தில், நகைச் சுவையின் வளர்ச்சியையும், ஒவ்வொருகாலத்தே அது எவ்வாறு எத்துணை நகை விளைததது என்பதையும், நகைச்சுவை பயப்பதற்குத் தமிழ்ப் புலவர்கள் ஒவ்வொருகாலத்தில் ஒரோவழிக் கையாண்ட முறைகளையும் காணமுயல்வதுபயன் தருவதோர் ஆராய்ச்சியாம்.

இலக்கியங்களில் நகையொழிந்த எழுவகைச்சுவைகளும் பெருகிவருமாயினும், நகைச்சுவை மிக அருகியே வருதல் காணத்தக்கது. நாடக இலயக்கியத்தில், பார்ப்போருக்கு மனவேதனையை யுண்டாக்கும் அழுகை, வெகுளி, இளிவரல், அச்சப் முதலிய சுவைகள் தம் மிகுதியினாலுண்டாக்கும் களைப்பை நீக்க, இடையே நகைச்சுவை ததும்பும் பாத்திரங்களும் காட்சிகளும்புகுத்தப்படுமேயல்லாமல், பிறஇலக்கியங்களில் ஏனைய சுவைகளின் அளவை நோக்குமிடத்து நகைச்சுவை மிகக் குறைந்துவருவதை யாரும் மறுக்கவோ முடியாது.

நகைச்சுவை அதிகம் பெய்து எழுதும் வழக்கம் பிற்காலத்தேதான் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆங்கில பாஷையில், நாடக இலக்கியத்திலும் பிற்காலத்தில் எழுதப்பட்ட உரை நூல்களிலும் இந்தச்சுவை அதிகம் காணப்படுமேயன்றி, பழைய செய்யுள் இலக்கியத்தில் அதிகமில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டில் வெளிவந்த உரைநடை இலக்கியங்களிலும் பத்திரிகைகளிலும் நகைச்சுவைபட எழுதுவது சகஜமாகிவிட்டது. நமது தமிழ்மொழியிலும் ஒட்டக்கூத்தர், புகழேந்தி, கம்பர், ஔவையார், இரட்டையர் இன்னோரன்ன கவிகளின் கதைகளைக் கூறும் தனிப்பாடல்களில் நகைச்சுவை அதிகம் வருமாயினும், சங்க நூல்களிலும், காவியங்களிலும், உரை நூல்களிலும் அது குறைவாகவே காணப்படுகின்றது. தற்காலம் நகைச்சுவை ததும்பும் கட்டுரைகளும், பாடல்களும், துணுக்குகளும் பத்திரிகைகளில்வெளிவருதல் நகைச்சுவை விருத்தியடைவதற்குச் சான்றாகும்.

மகா கவிகளால் எழுதப் பெற்ற செய்யுள் இலக்கியங்களிலும் இச்சுவை நாளடைவில் விருத்தியடைந்துகொண்டே செல்வது நோக்கத்தக்கது. இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சங்ககாலத்தேவாழ்ந்த கபிலர் பாடிய குறிஞ்சிக் கலிப் பாட்டில் நகைச்சுவை யமைந்த தன்மையை முதலாவது ஆராய்வாம்.—

தலைவி புணர்ச்சி விழையாத நிலைமையில் இருந்தபோது தலைவன் அவளைத் தழுவுதலும், இது அழகு அல்ல என்று அவள் தடுக்க, இவன் தனக்கு அது தக்கதேஎன்று விளையாட்டாகக் காரணங்காட்டி வற்புறுத்தியதன்மேல் அவள் இணங்கிய பான்மையைப் பகர்கின்றது. (கலித்தொகை, 62.)

தலைவி:—புணர்ச்சி மேவாதாரையும் வலிந்து மேவுகின்றானே, நாணம் என்பது இல்லாத இவன் ஒருவன்! (எனத் தலைவனை நோக்கிக் கூறினாள்)

தலைவன்:— நங்காய்! மேவும்பொழுதும், மேவுதற்கு விருப்பமில்லாத பொழுதும் தோன்றுகின்ற புணர்ச்சிக் குறிப்புக்களை நீயறிவதுபோல நான் அறிய இயலவில்லை. பூங்கொத்துக்கள் என்றும் நீங்காத கொடிபோன்ற மெல்லிய தன்மையுடைய நின்னைத் தழுவுதல் எனக்கு மிக இனிதாகலின் தழுவினேன். (எனத் தலைவிக்குப் பதிலுரைத்தான்)

தலைவி:—தமக்கு இனிதாயிருக்குமென்று பிறர்க்குத் துன்பம்செய்வது நியாயமாகுமா?

தலைவன்:—சிற்றின்பம் நுகர வியலாத வயது முதிர்ந்த பெரியோர் போற்றும் நெறியைக் கைவிடு. இயற்கைக்கும், உலகஅநுபவத்திற்கும் பொருத்தமாக நான் கூறுகின்ற நியாயத்தைக் கேள். நீருண்பவர், நீர் வேட்கையுடைய தமக்கு நல்லதென்பதன்றி நீருக்கு நன்மை பயக்கும் என்று பருகுவாரோ? காமவிடாயினால் மயங்கித்தத்தளிக்கும் நான் என்னசெய்வது? அங்ஙிலையினும் வேதத்தில் கூறிய அறத்தையே கைக்கொண்டிருக்கிறேன். மதிபோன்ற முகத்தையுடைய மாதராரை வலியக் கொள்ளலும் வேதத்தில் கூறிய எண்வகை மணங்களில் ஒன்றாகிய இராக்கதம் என்பது உனக்குத் தெரியாதா?

இக்கருத்தினை அடக்கியிருக்கின்ற அப்பாட்டின் அடிகளிற்சில இவை—

"வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண் பவர்"

"மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று"

இச்சம்பாஷணையில், தலைவனால் தாங்கமுடியாத காம நோயின் தன்மையும், அதனால் அவன் செய்யும் செயல் சான்றோர் கூறிய விதிகளுக்கு மாறுபட்டதாயினும், தலைவன் தான் அறநெறியில்நின்று ஒழுகுவது போன்று அதற்குரிய நியாயங்களைத் தலைவிபாற் கூறுதலும் நகைச்சுவை பயப்பனவாகும்.

காவல் மிகுதியால் தலைமகளைக் கூடப்பெறாத தலைவன் அவளை நாடுவதற்கு ஒரு உபாயம்சிந்தித்து, நீர் வேட்கை மிகுந்தவன்போல, தலைவியின் வீட்டிலுள்ளோரை நீர் கேட்க, அவனுக்கு நீர் கொடுத்து வரும்படி தலைமைகளை அவள் தாய் வாயிலுக்கனுப்பினாள். அப்படியே தலைமகள் தலைவனுக்கு நீருண்ணக் கொடுக்க, இடையீட்டினாலே களவுக்கூட்டம் பெறாமல் வருந்திய தலைவன், அவள் கையைப்பற்றி நலிந்தான். தலைவி மெய்மறந்து "இவன் செய்ததைப்பார்" என்று கூவத் தாய் அலறி ஓடிவந்தாள். உடனே தன்னையறியாமல் தலைமகனுக் குண்டாக்கிய பழியை நீக்கத் தலைவி தன் மதியின் நுட்பத்தால் தலைவன் செயலை மறைத்து "இவன் உண்ணும் நீர் விக்கினான்" என்று உரைக்க, தலைவியின் அன்னை அதிதிக்கு வந்த ஆபத்தை நீக்குவது தன்கடமையென்று அவன் முதுகைத் தடவினாள். அவ்வமயம் தலைவன் தன் கடைக்கண்ணால் தலைவியின் நெஞ்சம் வருந்தும்படிக் குறிப்பாக நகைக்கூட்டம் செய்தான் என்ற பாடல் (கலித்தொகை 51) முழுதும் நகைச் சுவை ததும்பும்.

இப் பழைய சங்கச்செய்யுள்களிலெல்லாம் அகப்பொருளுக் கின்றியமையாத உவகைச் சுவையே மிக்குத் ததும்பும். இச்சுவையை வடமொழியாளர் சிருங்கார ரஸம் என்பர். இப்பாடல்களுக்கு இன்றியமையாத உவகைச் சுவையைச் சிறப்பிக்க இடையிடையே நகைச்சுவை ஓரோவழி அருகி வருதலும், அதுவும் குறிப்பாக உய்த்துணர வைக்கப்படுவதும், நன்கு நோக்கத்தக்கது.

(தொடரும்)

---

# வில்லிபாரதம்

[7-வது வால்யூம்-796-வது பக்கத் தொடர்ச்சி]

## இராசராசன்-துரியோதனன்.

அறத்தின் சார்பு நின்று இப் பாரதத்திற்குக் கதாநாயகனாக அமைந்த தருமனது மாண்பினைக் கண்டோம். இனி, மறத்தின் சார்பு நின்று பாரதத்தின் நடுநாயக மென்னத் திகழ்ந்தவொரு பேருருவமாகிய சுயோதனனது பண்பினைக் கருதலாம். இவனது குணவிசேடங்களை ஆராயப் புகுங்கால், அறிவியும் இகழ்ச்சிக்கு உரியவனுமான சுயோதனனது இணையற்ற படைத்துணையை, அறிவொடு குணமும் வாய்ந்த ஐயவர் வென்றதே வியப்பென்று பாராட்டும், பிள்ளைகளின் பாடப்புத்தகக் கற்பனைகளை முதலில் நம் மனத்தினின்று துடைத்துவிட வேண்டும். இதற்கெதிராக, நிகரற்றஅறிவும் நிரம்பிய அழகும் அமைந்த இந்தச் சுயோதனன், நம்புதற்கரிய துணை கொண்டு, ஆற்றலோடு அனுக்கிரகமும் வாய்ந்த தருமத்தை யெதிர்த்து, தோல்வியில் வெற்றியேதொனிக்குமாறு தொலைந்து, தன் பெருவாழ்வினை வீணாக முடித்துக்கொண்டான் என்பதை உணர்ந்து, அன்னது நிகழ்ந்தவாறு எவ்வாறு என்னும் விஷயத்தை ஆழ்ந்து ஆராய்வதே இக்காவியத்தைக் கற்பதற்குரிய முறைமையாம்.

சுயோதனனது உண்மையான பெருமைக்கு நம் புலவர் வில்லிபுத்தூரார் எவ்வகையினும் பகைவராய் நிற்கவில்லை ; மற்று, அந்தப் பெருமையினை எடுத்துக் கூறுவதில் உவகையே கொண்டிருந்தனர். அவனது அரச வைபவத்தையும் அமைச்சர் செல்வத்தையும் மகிழ்ந்து இவர் பாடுந் திறமை பாராட்டற் குரியது. கண்ணன் தூதுசென்ற காலத்து, இம் மன்னவனது நாளோலக்கச் சிறப்பினை, அரிதின் தேர்ந்து அமைத்த சந்தப்பாக்களில்—

தொக்க வெண்கவரி யால வட்டநிரை
சொட்டைவாள் பரிசை துகிலுடன்
கைக்க ளாசிபிவை கொண்டு லாவிவரு
கன்னி மங்கையர் அநேகரும்
மிக்க வேதியர்கள் வல்ல பல்கலைவி
தத்தி னுள்ளவர்கள் யாவரும்
தக்க தம்பியரும் வந்து சூழவுயர்
தரணிமே லிருபர் தம்பிரான்.

முட்ட நித்தில நிரைத்த பந்தரின்
நகைத்த சீரரி முகத்தகால்
வட்ட மெத்தைகொ டமைத்த பீடமிசை
வாசவன் கொலென வைகினான்
பட்ட வர்த்தனரும் மகுட வர்த்தனரும்
வந்து சேவடி பணிந்தபின்
இட்ட பொற்றவிசின் முறைமை யாலினி
திருக்க வென்றவரை ஏவியே.

என்ன இனிது வருணித்திருக்கிறார். இவ்வருணனை உயர்வு நவிற்சியென்று கூறுதற்கில்லை. இவ்வில்லிபுத்தூரார் காலத்திருந்த விஜயநகர ராயர்களும், முகலாயர்களும் பொன் தம்பங்களிடையில் மணியழுத்திய மயிலாசனத்தில் வீற்றிருந்து நடுநாயகம் செலுத்திய அத்தகைய பெருவாழ்வுவாழ்ந்தவர்களாவார் ஆதலின், இப்பாட்டு முழுதும் விரிவான சரித்திரமுடைய இடைக்கால இந்தியாவின் நறுமணத்தையே வீசக் காணலாம். இத்தகைய வைபவ இருக்கையிலமர்ந்து,

காவன் மன்னவர் முகங்க டோறமிரு
கண்ப ரப்பியமர் கருதுவோர்

ஏவலின் கண்வரு தூதனு மிடையன்
இன்று நம்மவைபி லெய்தினல்
ஓவலின் றியெதிர் சென்று கண்டுதொழு
துறவு கூறிலினி யுங்களூர்
தீவ லம்செய அடர்ப்ப னென்றுநனி
சீறினன் முறைமை மாறினன்.

சபையில் நிச்சப்தம்; நிகழ்ச்சிகளும், இயற்கையாக நடப்பதல்லாமல் சுயோதனன் இட்ட அளவின்படி நிகழ்வதற் கேற்ப இச்சந்தம் அமைந்துள்ளது. எம்பெருமான் அப்போது சபையை அணுகினன். துரியோதனனிடத்தில் எவ்வளவுதான் அச்சமுடையோரேனும், கண்ணனது மாண்புடைத்தோற்றம் துரியோதனனது ஆக்ஞையைவிடச் சிறந்ததாதலின், 'துன்னுகங்கை மைந்தனும், துரோணனொடு சுதனும், நீதிபுனை விதுரனும்' மற்றோரும் கண்ணனை எதிர்கொண்டனர்,

கன்ன னுந்தலை கவிழ்ந் திருந்தனன்
அழன்றுளம் சகுனி கருகினன்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
மொய்துழாய் முகிலும் எய்தினன்.

சுயோதனனோ, தன்னவை வந்த கண்ணனுக்கு முகங் கொடாமல்,

என்ன கந்தனை யொழித்து நென்னலிடை
இந்த மாநகரி லெய்தியும்
பொன்ன கங்கொள் புயவிதுர னில்லிடை
புகுந்த தென்கொலிது புகலென

இகழ்ந்து கேட்கவும், மாயவன் மதிப்பதற்கரிய தந்திரம் வாய்ந்த வோர் மறுமொழி தேர்ந்து,

என்னில் நின்னில் ஒருபேத மில்லையிது
என்னில் நின்னில் அதுவென்னினும்
மின்னின் மின்னிலகு விறல்நெ டும்படை
விதுரன்வந் தெதிர்வி ளம்பினன்

என்ன, முதல்நாள், தொல்லை நாயகனை வரவேற்று அவனது எண்ணத்தைத் தோற்கடிக்க நினைத்ததைச் சகுனியின் மதியைக் கேட்டுக் கைவிட்ட அவ்வணங்கா முடியுடைமை உண்மையில் ஒரு அரசியற் பேதமையேயாம் என்னுங்குறிப்பினை 'விதுரன்வந் தெதிர் விளம்பினன்' (அதாவது, நீயோ வந்தெதிர் விளம்பவில்லையே) என்னுஞ்சொற்களில் அமைத்துக்காட்டி, பிறகு,

உன்னி லின்னமுள தொன்று பஞ்சவர்
உரைக்க வந்தவொரு தூதன்யான்
நின்னில் இன்னடிசி லுண்டு நின்னுடன்
வெறுக்க வெண்ணுவது நீதியோ

என்று உண்மையையும் மறைக்காமல் விளம்பிவிட்டு மேலே தான் தூதுவந்த செய்தியைச் செப்பவிரைகின்றார். ஏனெனின், 'நின்னில் என்னில் பேதமில்லை' யென்றும், 'நின்னுடன் வெறுக்கவேண்டி வரலாம்' என்றும் ஓரேமூச்சில் கூறிய மாறுபாட்டினைச்சுயோதனன் கண்டுகொள்ளுமுன் விஷயத்தை மாற்றும் பொருட்டு இவ்விரைவு அவசியமாகின்றது. இல்லையேல், 'அப்படி நீ பகைக்கும் எண்ணத்துடன் வந்திருந்தாயெனின் இப்பொழுதே வெளியேறக்கடவை' என்று சுயோதனன் கழறிவிடுவனாயின், அதன்பின் அச்சபையிலிருந்த அனைவரும்கேட்டு மனமுவக்கும்படி பாண்டவரது நியாயத்தையும், துரியோதனன் கொடுமையையும், தனது தூதின்எளிய இலக்ஷியத்தையும் பற்றிச் சொற்பொழிவாற்றியிருக்க முடியாதன்றோ? வடமொழிபாரதத்தில் நிகழ்ச்சிமுறை வேறுபடுகின்றது. அங்கு எடுத்த எடுப்பிலேயே துரியோதனன், "வீடுமனும், சிலையாசிரியனும் யானும் இருக்க, தாசிமகனாகிய விதுரனுடன் ஏகினையே" என்று கூறினனென்றும், அதற்குக் கண்ணன், 'நீ கொடியன், சிஷ்டர்களைக் கண்டிக்கிறாய்; விதுரன் சீலன், ஆதலின் அவன்மனை ஏகினேன்' என்று நிஷ்டூரமாக வைதாரென்றும் கூறப்பெற்றிருக்கிறது. இப்படி நிகழ்வது சிறிதேனும்பொருத்தமில்லை. ஏனெனில் விதுரனைச் சுயோதனன் அவ்வாறு பழித்திருந்தால், விதுரனது வில் அப்பொழுதே ஒடிபட்டிருக்கவேண்டும். இரண்டாவதாக, கண்ணன் எடுத்த எடுப்பிலே அவ்வாறு கூறியிருந்தால்பின் அக்கணமே மறுவார்த்தையின்றி அச்சபையைவிட்டு அவன் வெளியேறிவிடுவதே தகுதியாகும். ஏனெனில் கண்ணன் எவ்வளவுதான் மதிப்புவாய்ந்தவரேனும்,—(அம்மதிப்பினை அவர் பெற்றது இன்சொற்களை எப்பொழுதும் வழங்குங் குணத்தினாலன்றோ) — வெளிப்படையாகத் தம் அரசனைப் பழிக்கப் புகுந்துவிட்டால், சபையோர்கள் தம் அரசனுடன்தான் பரிந்துசேர்ந்துகொள்வார்கள். 'இருக்குமெழிலவைக் கேற்காமல் தன் மதத்தால் இயம்பும் அரக்கிமகனுடன் ஒன்றும் கழறேன்மின்,'' என்று பிற்றைநாள் தன்பால் தூதுவந்து இகழ்ந்து பேசிய கடோற்கசனைப்பற்றிக் கூறியதுபோல் இப்போதும் துரியோதனன் கூறிவிட்டானெனில் கண்ணன் அரசசபையிலிருந்து ஏமாற்றத்துடன் வெளியேற நேர்ந்திருக்கும். ஆயினும் கண்ணனது நோக்கம் அதுவல்லவென்பது தெளிவு. தனது நேர்மையினாலும், இனிய வாசகங்களினாலும் அச்சபையோர்கள் சுயோதனனிடத்துப் பகைமைகொள்ளுமாறு தூண்டிவிடுவதே அவரது நோக்கம். தனது தூண்டல்களெல்லாம் முக்கியமாக விதுரன் ஒருவனிடத்தாவது பலிக்குமென்னும் நிச்சயம் அவருக்கு உண்டு இவ்வாறாக, இந்நாளோலக்க நிகழ்ச்சி, பலவிதமாகவும் பல நூல்களிலும் வருணிக்கப்பட்டிருக்கின்றதெனினும், இவ் வில்லிபாரதத்தில் துரியோதனனது குணங்களுக்கு மாறுபடாவண்ணம் அமைந்துஇருப்பது மிகவும் சிறப்புடையதாம்.

(தொடரும்)

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜிஞ்சிப்
அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்டுகள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி
சோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்.

# ஒத்தெல்லோ

[Shakespeare's—"Othello"]

முன்னுரை :—

கலையெனும் நலத்தினால் நம்முடைய இதயத்தினைத் தூயதாக்கி, அழகின்பால் அறத்தின்பால் அன்பின்பால் இன்பத்தின்பால் அமைதியுற உய்த்துச்செல்லும் புலமைசான்றவர் இயற்றியுள நூல்கள்தாம் எம்மொழியிற் பிறந்துளவேனும், இக் கலாநிலயத்தினுள் தமிழெனும் வடிவுகொண்டு தவழ்ந்துவரலாகின்றன. அன்னதோர் மேன்மை வாய்ந்த புலவரரசர்களின் முன்னணி நிற்கும் ஷேக்ஸ்ப்பியர் எழுதிய நாடகங்களில், இதன்முன், 1932-வது ஆண்டில் "ஜூலியஸ் ஸீஸர்" என்னும் நாடகத்தையும், 1933-வது ஆண்டில் "காற்று மழை" என்னும் நாடகத்தையும் மொழிபெயர்த்து, விரிவுரை விளக்க ஆராய்ச்சிகளுடன் எழுதியது போன்றே, இவ்வாண்டில் "ஒத்தெல்லோ" என்னும் இம்மாபெரும் நாடகத்தை இங்கு எழுதத் துவக்கி யிருக்கின்றோம். ஷேக்ஸ்ப்பியர் மகாகவி எழுதியுள்ள நாடகங்களிலெல்லாம் மிகச் சிறந்தனவாகக் கருதப்படும், ஹாம்லெட், மக்பெத், கிங் லியர், ஒத்தெல்லோ, என்னும் இந்நான்கினில், நூல்நயம் நுனித்துணருந் திறமைசான்ற கல்வியாளர்களிற் சிலர் இந்த "ஒத்தெல்லோ"விற்கு முதலிடந் தந்திருக்கின்றனர். இதன் கதையோ கருதற்கரிய துன்பஇயல் வாய்ந்தது. ஆயினும், பிறர் படுந் துயரத்தை ஓர் கலையின் காட்சியாகக்காட்டி நம் கருத்தினை மாசுதீரக் கழுவிப் புனிதமாக்குகின்றவோர் நற்பெரும் நலத்தினை இவ்விழுமிய கவிஞர் நமக்கு நல்குகின்றார். ஆதலாலன்றோ, "இந்திய ஆட்சி நமக்கு இருப்பினும் இருக்கட்டும், இல்லாதொழியினும் ஒழியட்டும்; ஷேக்ஸ்ப்பியர் இல்லாமலோ நம்மால் இருக்க இயலாது! இந்திய ஆட்சி, எப்படியும் ஒருநாள் நம் கையைவிட்டுப் போய்விடும்; மற்று, ஷேக்ஸ்ப்பியரோ போவாரல்லர், என்றென்றும் நம்மோடு தங்கியே இருப்பார் அவர்; எங்கள் ஷேக்ஸ்ப்பியரை நாங்கள் விட்டுவிட முடியாது" என்று ஒருநூறு ஆண்டுகளுக்கு முன் ஏமாப்புடன் எடுத்துப் பேசினார் அவ் வாங்கிலவித்தகர் தாமஸ் கார்லைல் என்பவர். எனினும், ஹோமர், காளிதாஸன், கீதே, கம்பர், ஷேக்ஸ்ப்பியர், அனைய உத்தமப் புலமையோர் அவரவர் பிறந்து வாழ்ந்த காலத்திற்குந் தேயத்திற்குமே அன்றி உலகடங்கலும் ஊழிகாறும் உரிமையுடன் உவந்து கொள்ளற்கேற்ற புண்ணியத்தவர்களாய் நிற்கின்றனர். ஆதலின், ஆங்கிலம் பயின்றிராதார், அந் நன்னலச் செம்மைக்கு முற்றிலும் அயலாகி அகலாவண்ணம், இப் புலவர்பெருமான் நாடகங்களை இங்கு மொழிபெயர்த்துக்கொடுக்கின்றோம். முதனூலின் சொன்னயத்தி னொருபாகம் மொழிபெயர்ப்பில் தோன்றாமற் போதலுங் கூடும் என்பது உண்மையேயாயினும், அதுபற்றியே, எஞ்சிநின்று கிடைக்கவல்ல கதையின் சுவையுடன் கருத்தின் அருமை அனையவைகளைக் கைக்கொள்ளாமல் விடுவது கடனன்று. அன்றியும், ஆங்கிலத்திலேயே இந்நாடகத்தைப் படித்து உணரவல்ல பயிற்சியுடையோர்க்கும், இங்கு எழுதப்பெறுகின்ற குறிப்புரை விளக்கம் ஆராய்ச்சி முதலியவைகள், இந் நாடகத்தின் நுட்பத்தினைச் செவ்விதின் தேர்ந்து கொள்ள உதவியா யமையலாம் என்று நினைக்கத் துணிகின்றோம்.

ஒன்று நாம் இங்கு உணர்த்துதல் வேண்டும். ஓடியவாங்கே இந்நாடகத்தினை ஓதியவளவில் ஒருவரும் தெரிந்துகொள்ளல் இயலாது. ஆழ்ந்து அமர்ந்த சிந்தனையைச்செலுத்தி, குறிப்புரைகளில் கூறப்படுகின்ற பொருள்களையும் உட்கொண்டு, பன்முறை படித்துப் படித்துப் பின்னரே விளங்கவருகின்ற நூல்களின் இனத்தைச் சேர்ந்தன ஷேக்ஸ்ப்பியரின் நாடகங்கள். உண்மையே நோக்குங்கால், கற்றற்குரியனவும் அக் கல்வியால் நற்பயன் நல்கவல்லனவும் ஆகிய சீரிய நூல்கள் அனைத்திற்குமே மேலே சொன்ன அவ்வாசகம் நிரந்தரம் பொருந்தப்பெறு மென்பதை அறியாதார் இலர்.

---

## அங்கம் 1. களம் 1.

இடம்:—வெனிஸ் நகரத்தின் ஒரு வீதி.

ராடரிகோவும் இயாகோவும் தம்முள் பேசிக்கொண்டு வருகின்றனர்.

குறிப்பு:—இந்நாடகத்தின் முதற்களமாகிய இது, இத்தாலி தேசத்திலுள்ள வெனிஸ் என்னும் நகரத்தின் ஒரு வீதியில் துவக்குகின்றது. இரவு பன்னிரண்டு அல்லது ஒரு மணி இருக்கலாம். ராடரிகோ (Roderigo) என்பவன், வெனிஸ் நகரத்துச் செல்வர்களில் ஒருவன். இயாகோ (Iago) என்பவன் இந்நாடகத்தலைவனாகிய ஒத்தெல்லோவிற்குப் பதாகையாளன். (பதாகை-கொடி). ஒரு வீரனுக்கு முன் அவனது கொடியைத் தாங்கிச் செல்கின்ற படைத்தொழில் செய்கின்றவனைப் பதாகையாளன் என்று அழைப்பர். ராடரிகோ அறிவின் திறம் அதிகம் இல்லாத ஒரு அசடன். வஞ்சனையும் கள்ளமும் வாயந்த கன்மனக் கொடியோன் இயாகோ வெனிஸ் நகரத்து ஸெனட் சபையினர்களில் ஒருவராகிய ப்ரபான்ஷியோ (Brabantio) என்பவர்தம் புதல்வி டெஸ்டிமோனாவை (Desdemona) இந்த ராடரிகோவிற்கு மணம் முடித்துவைப்பதாக ஆசை காட்டிக்காட்டி இயாகோ ராடரிகோவினிடத்திலிருந்து பொருள் பறித்துக்கொண்டிருந்தான். டெஸ்டிமோனாவோ, இச்செய்தி யாதும் அறியாள்; ஒரு நாள், தான் காதலித்த ஒத்தெல்லாவுடன், தன் தந்தைக்குந் தெரியாமல், மனையைவிட்டு அவள் ஏகிவிட்டாள். அதன்மேல் ராடரிகோ, மிக்க கோபமுடன் இயாகோவை அடைந்து, "டெஸ்டிமோனா ஒத்தெல்லோவைக் காதலித்திருந்தசெய்தி, அவன் பதாகையாளனாகிய உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே; மற்று, என்னை ஆசைகாட்டி வஞ்சித்தது ஏன்" என்று ஏசுவதும், இயாகோ தனக்கு அது வொன்றும் முன்னர்த் தெரிந்ததில்லை என்று மறுப்பதுமாக இருக்கின்ற நிலையிலிருந்து சம்பாஷணை தொடர்கின்றது.

---

ராடரிகோ:—சீ சீ! ஒருபோதும் எனக்கு அதனைச் சொல்லாதே[1]!; இதுவோ மிகவும்அன்பிலாதது என்றே கொள்கின்றேன் — என் பணப்பையை அதன் கயிற்றினோடும் உன்னுடையதேபோல் வைத்திருந்த இயாகோ, நீ, இதனை[2] அறிந்திருந்தும்—[3].

இயாகோ:—அட கடவுளே ! நீதான் நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கின்றாயே—விஷயம் அப்படி இருக்குமென்று நான் எப்பொழுதேனும் கனவுகண்டிருந்தாலும், என்னை அடியுடன் வெறுத்துவிடு[4].

ராடரிகோ:–அவனைநீ உன்பகைமையிற் பற்றியுள்ளாய் என்று எனக்குக் கூறினாய்[5].

இயாகோ:—இல்லையேல் என்னை இகழ்[6]. இந்நகரத்துப் பெரியமனிதர் மூவர், தாமே சென்று வேண்டினராய், என்னைஅவனதுஅடுத்த அதிகாரி யாக்கிக்கொள்ளும்படி தம் தலையணி நீக்கி அவன்முன் நின்றனர்[7]—மனிதனுக்கு இருக்கும் தன்னம்பிக்கையின்படி, எனக்குரிய வில்லையை யான் அறிவேன், அதனில் தாழாதவோர் பதவிக்கு நான் தகுதியுடையவனு மாவேன்[8] — அவனோ, தன் செருக்கையும் நோக்கத்தையுமே காதலித்தவனாய்[9],பொருதொழிற்குரிய பரிபாஷைகளை அஞ்சும்படி திணித்த நெட்டுரைகள் ஏதேதோ சுழற்றிச் சுழற்றிச் சொல்லி அவர்களைக் கழிப்பானாகி, முடிவாக என் பரிவாளிகளின் வேண்டுகோளைத் தள்ளிவிடுகின்றான்[10]; "நிச்சயமாக எனக்குவேண்டியஉத்தியோகஸ்தனைநான்முன்னரே, தேர்ந்துகொண்டாகிவிட்டது" என்று உரைப்பான் இவன்[11]. மற்று, அவன்தான்யாவன்? ஒருபெரும் கணிதநூல்வல்லவன்,மெய்யே;மைக்கேல் காஸ்ஸியோ என்பானொருவன், ப்ளாரென்ஸ் நகரத்தைச் சேர்ந்தவன்[12]—நாசமாய்ப் போகவே நிற்கின்றான் அந்தப் பயல். இதன்முன் படைகளைக் களத்தினுள் நிறுத்தியதில்லை; புத்தகச் சித்தாந்தமே யல்லாமல், அணிவகுப்பினை அவன் ஓர் பெண்ணினும் அதிகம் யாதுமறியான்[13]; அந்த வகையில், நாப்படைத்த நகரச்சபை யங்கத்தினர் யாரும் அவனளவு திறமையாய்ச் சொல்லிவிடுவார்களே[14]. வெறும் பிதற்றல், காரியமில்லை; இவன் சேவகமெல்லாம் இவ்வளவுதான். ஆனால், ஐயா, தேர்ந்துகொள்ளப்பட்டவன் அவன்; ரோட்ஸிலும் ஸைப்ரஸிலும் கிறிஸ்தவ நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் அவன்கண்களே என்திறத்தை நிதரிசனமாகக் கண்டிருந்தும், நானோவெனில், இந்த வரவுசெலவுக் கணக்கனால், காற்றுக் கவர்ந்து அடங்கிக்கிடக்க வேண்டும்[15]. இவன், காலமுறையில், அவனது அடுத்த அதிகாரியாக இருக்க வேண்டும்; நானோ—கடவுளே குறிக்கொள்க:—அம்மூர் பிரபுவின் பதாகையாளனே[16].

ராட:—அட தெய்வமே, அதனைவிட நான் அவனுக்குக் கொலைகாரனா யிருப்பேனே[17].

(1) உனக்கு இது தெரியாதென்று நீ எத்தனைதான் சொன்னாலும் நான் அதனை ஒருபோதும் நம்பமாட்டேன்—என்பது பொருள்.

(2) இதனை— டெஸ்டிமோனாவிற்கும் ஒத்தெல்லோவிற்கும் இருந்த காதலை.

(3)"அறிந்திருந்தும்...எனக்குச் சொல்லாமலிருக்கலாமா"—என்று ராடரிகோ வாக்கியத்தைமுடிப்பதன்முன், இயாகோ, தடுத்துப் பேசிவிடுகின்றான்.

(4) கனவிலும் இதனை முன் அறியேன். அப்படி நான் அறிந்திருந்தேனென்று தெரியவருமாயின், பிறகு, உன் பகையுடைய வெறுப்பிற்கு நான் பாத்திரமாகின்றேன்—என்பது பொருள்.

(5) ஒருவனைப் "பகைக்கின்றேன்" என்பதற்கு,"அவனைப் பகைமையிற் பற்றியுள்ளேன்" என்று கூறுவது ஆங்கில மரபு.

(6) அது உண்மையில்லையானால் நான் உன் இகழ்ச்சிக்குப் பாத்திரமாகின்றேன்—என்பது பொருள். ஒத்தெல்லோவின்பால் தன் பகைமை நிலைத்திருக்கின்றதென்பதற்கு இனிக் காரணம் கூறப் புகுகின்றான் இயாகோ.

(7) ஒத்தெல்லோ ஒரு படைத்தலைவன். தன்னுடைய அடுத்த உத்தியோகஸ்தனை அமர்த்திக்கொள்கின்ற அதிகாரம் அவன் கைகளில் இருந்தது. இயாகோவிற்கு அந்தப் பதவியைக் கொடுக்கும்படி, அந்நகரத்துப் பெரிய மனிதர் மூவர் தாமே நேராகச்சென்று ஒத்தெல்லோவை வணக்கமுடன் வேண்டிக் கொண்டனர். தலையணிநீக்கி நின்றனர் = தலைப்பாகையை அகற்றி நின்றார். தலைப்பாகையை நீக்கி வந்தனம்செய்தல் மிக்க பணிவுடைமைக்கு அடையாளம்.

(8) "மனிதனாயிருக்கும் ஒவ்வொருவனும் தன் தகுதியைப்பற்றி நம்பிக்கை உடையவனாகவே இருப்பான். நானும் இப்பதவிக்கு உரியவன்என்றே நினைக்கின்றேன். படைத்தலைவனே அல்லாவிடினும், குறைந்தது அடுத்த உத்தியோகஸ்தன் பதவிக்கு நான் தகுதியுடையேன்"—என்கின்றான். இயாகோ கயவன்; "எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து," என்ற குறள் இவனுக்குப் பொருந்துமென்பதை இந்த வாசகம் புகல்கின்றது.

(9) செருக்கோவென்று எண்ணும்படியான சுயமதிப்பும், தன் கருத்தை நிறைவேற்றியே தீர்கின்ற குணமும், ஒத்தெல்லோவிற்கு உண்டு என்பது பின் தெரியவரும். "அந்தச் செருக்கையும் பிடிவாதத்தையுமே பற்றிக்கொண்டு என்னைத் தள்ளிவிட்டான்" என்று குறை கூறுகின்றான் இயாகோ.

(10) "பேரின் ஆற்றலைப்பற்றிப் பலபடப்பேசி,அந்தப் பதவிக்கு நான் தகுந்தவன்அல்லன் என்று காட்டி, எனக்காகப்பரிந்துபேசகின்றவர்களின் வேண்டுகோளைமறுத்துவிடுகின்றான்"—என்பது பொருள்.

(11) இனி, அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற, மைக்கீல் காஸ்ஸியோ, (Michael Cassio) என்பவனது தகுதியின்மையைப் பேசுகின்றான் இயாகோ.

(12) இயாகோ வெனிஸ் நகரத்தைச் சேர்ந்தவன். தனக்கு மேலதிகாரியாக, ப்ளாரன்ஸ் (Florence) நகரத்தைச்சேர்ந்தஒருவனை ஏற்றுக்கொள்ளப்பொறுக்கவில்லை. வேறு இடத்தைச் சேர்ந்தவர் என்ற வித்தியாசம் காட்டுகின்ற இதுவும் கயவர் குணம்.

(13) இந்தக்காஸ்ஸியோவிற்குப் படிப்பு உண்டேயொழியப்பயிற்சியில்லையென்றும்,போர்நடத்தும்முறைஅவன் யாதும் அறியானென்றும் இகழ்கின்றான். தங்களைப் புத்திசாலிகளென்றும் காரியவாதிகளென்றும் மதித்துக்கொண்டு, கல்விநிறைந்தவர்களை, "வெறும் புத்தக சித்தாந்திகள்" என்று இகழ்வதும் கயவர் குணம்.

(14) சட்டசபைகளிலும் நகரசபைகளிலும் இருந்து, காரியம் செய்யமாட்டாமல், பேசமாத்திரம் பழகிய நாக்குடைய எவரும், காஸ்ஸியோவைப் போல், தம் புத்தக சித்தாந்தத்தைக்கொண்டு போர்நடத்தும்முறையெல்லாம் பேசிவிடலாம்—என்பது பொருள்.

(15) காஸ்ஸீயோ, வர்த்தகம் பெருத்த ப்ளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவனாதலின், அவனை "வரவு செலவுக் கணக்கன்"என்று,அவனுடைய கணிதநூற்கல்வியையும் உள்ளடக்கி இகழ்கின்றான், இயாகோ.

என் திறமையை ஒத்தெல்லோ கண்டிருந்தும் நானோவெனில்கணக்கனால்- காற்றுக்கவர்ந்து- கிடக்கவேண்டும், என்று கூட்டிக்கொள்க.

இயா:— ஆயினும், பரிகாரம் ஒன்று மில்லை. உத்தியோகத்திற்கே இதுவோர் சாபம்: அடுத்திருப்பவன், மேலிருப்பவன் பதவிக்குப் பின்னுரிமையுடையவனுகின்ற பண்டைய கிரமப்படியல்லாமல், உயர்வதென்பது எழுத்தாலும் அபிமானத்தாலுமே செல்லலாகின்றது[18]! இனி, ஐய, நீதியாக யான் இம் மூரன்பால் அன்புவைக்க எந்த உறவினுலேனுங் கட்டுப்பட்டிருக்கின்றேனே என்பதை நீயே தீர்மானஞ் செய்துகொள்![19]

ராட:—ஆயின், அவனை நான் இனிப்பின்தொடரமாட்டேன்[20].

இயா:—ஓஹோ, ஐயா, சிறிது பொறுத்திரு! என் முறையை அவன்மேல் வழங்கவே அவனைப் பின்தொடர்கின்றேன்[21]. நாம் எல்லோருமே எசமானர்களா யிருக்கமுடியாது. அல்லது, எல்லா எசமானர்களையும் உண்மையாகத் தொடரவும் முடியாது. தாழ்வுடன் கீழ்ப்படியும் தம் அடிமைத்தனத்திலேயே சபலங்கொண்டவர்களாய், கடமையிற் கருத்துவைத்து, முழங்கால்மடக்கி ஆட்செய்வோர் எத்தனையோ பலர், பெரும்பாலும், தம் எசமானனது கழுதையேபோல், தீனிக்காகவேயன்றி வேறென்றிற்குமல்லாமல், தம் காலத்தைத் தேய்த்தொழிப்பதை நீ கண்டிருத்தல் வேண்டும்[22]. முதுமையடைந்ததும் அவர்களைத் தள்ளிவிடுகின்றனர். இந்தயோக்கியமான ஊழியர்களைக் கசையடி யடிக்கக்கண்டு உவப்பேன் யான். இவ்வாறன்றி, கடமையின் வடிவமும் தோற்றமும் அணிந்துகொண்டு, தங்கள் இதயம் தங்களையே அனுசரிக்கும்படி வைத்திருக்கின்ற மற்றவர்களும் உளர். இவர், ஊழியத்தின் பாவனைகளையே தம் தலைவர்மீது எறிந்துவிட்டு, அதனல் செழித்து வளர்ந்து, சட்டைக்கு உள்துணிதைத்துக்கொண்டானபின்[23], தங்களுக்கே ஆராதனை செய்துகொள்வாராகின்ருர்[24]. இன்னவர்களுக்குத்தான் ஆன்மாஎன்பது சிறிது இருக்கின்றது. அப்படிப்பட்ட தொன்றை உடையவன் நான். ஏனெனில், ஐய, அந்த மூரனுக இருப்பேனுனல் நான் இந்த இயாகோவாக இருக்கமாட்டேன் என்பது நீ ராடரிகோவாக இருப்பது எத்துணை நிச்சயமோ, அத்துணை நிச்சயமாம்[25]. அவனைப் பின்தொடரும் இதனில் நான் என்னையேதான் தொடர்கின்றவனுகின்றேன். கடவுளே சாக்ஷி, அன்பிற்கும் கடமைக்கும் நானே அல்லன்; என் காரியம் முடியும்பொருட்டே அப்படித் தோன்றுகின்றவன் நான். மற்று, என் வெளிச் செய்கைகள், புறக்குறையை நிறைக்கும்படி, என் இதயத்தின் இயற்கைத் தூண்டலையும் உருவத்தையும் நிரூபித்துக் காட்டுமானல், அப்பொழுதே என் இதயத்தைக் காகங்கள் கொத்தும்படி என் கையிலே ஏந்திநிற்பேன்[26]. நான் யாவனே அவன் அல்லன்[27].

ராட:—இப்படியெல்லாம் அவன் நினைத்தபடியே நிறைவேற, அந்தத் தடித்த உதடுகள் எத்துணை

இரண்டு கப்பல்கள் போகும்போது, ஒரு கப்பல், மற்றைய கப்பலுக்கும் காற்றடிக்கும் திசைக்கும் இடையே வருமானல், அம்மற்றக்கப்பலானது காற்றினைப்பெருமல் இழந்து எப்படி அடங்கிக் கிடக்குமோ, அப்படியே நான், இந்தக் காஸ்ஸியோ குறுக்கிட்டதால் என் உத்தியோகத்தில் மேலேறமாட்டாமல் கிடக்கின்றேன் — என்பது பொருள்.

(16) இவன் - காஸ்ஸியோ. அவனது - ஒத்தெல்லோவினது. 'கடவுளே குறிக்கொள்க' என்று இடையிற்கூறுமிது, தான் சொல்ல வருவது மிகவும்முக்கியமானதென்றுவற்புறுத்துதல் பொருட்டாம்.

மூர்பிரபு - மூர்ஜாதியைச் சேர்ந்த பிரபு. ஆப்பிரிக்கா கண்டத்தின் வடக்குப் பாகத்தில் வசிப்பவர் மூர்ஜாதியார். அவர் கரிய நிறமும் தடித்த உதடுகளும் உடையவர். ஒத்தெல்லோ இந்த மூர்ஜாதியைச் சேர்ந்தவன். மூர் பிரபு என்று இங்கு இயாகோ அவனைக்குறிப்பது வெறுப்பினல் விளைந்த வஞ்சனை மொழி. காஸ்ஸியோ அடுத்த அதிகாரியாக, நானே என்றென்றும் ஒத்தெல்லோவின் பதாகையாளனுகவே கிடக்கும்படி யாயிற்றே—என்கின்ருன்.

(17) இயாகோவிற்கு ஒத்தெல்லோ இப்படித் தீங்கு இழைத்தான் என்றுநம்பிக் கோபங்கொண்டுவிட்ட இந்த அசடன் ராடரிகோ, அவ்வொத்தெல்லோவைத் தூக்கில் இட்டுவிடும்படிதனக்கு யாரேனுங் கட்டளையிட்டால்தான் அதனை உவந்து செய்வானென்று கூறுகின்ருன்.

(18) கிரமப்படி யல்லாமல், சிபார்சினுலும் அபிமானத்தாலும் உத்தியோகத்தில் உயர்வது அவ்வுத்தியோகத்திற்கே உரியவோர் சாபமாய் நிலைத்துவிட்டதாகையால் இதற்குப் பரிகாரந் தேடிப் பயனில்லை, என்கின்ருன். எழுத்து='சிபாரசு'க் கடிதம்.

(19) மூரன்-மூர்ஜாதியான்.(The Moor) இப்படி என்னைக் கெடுத்தானுதலின், ஒத்தெல்லோவின்பால் நான் இனி அன்பு வைக்காதிருப்பதே நியாயமல்லவா-என்பது பொருள்.

(20) உன்நிலையில் நான் இருந்தால், ஒத்தெல்லோவை விட்டு விலகிவிடுவேன்—என்பது பொருள்.

(21) அவன் என்னைக் கெடுத்ததுபோல், என் முறையில் நான் அவனைக் கெடுப்பதற்குச் சமயம்வாய்ப்பதற்காகவே அவனுடன் இருக்கிறேன்; சிறிது பொறுத்திருந்து நான் செய்யப்போவதைப் பார்—என்பது பொருள்.

(22) உண்மையாகத் தம் எசமானனுக்கு ஊழியஞ்செய்கின்றவர்களைக்கழுதைக்கு நிகராக இகழ்கின்ற இயாகோவின் கயமை கருத்துட் கொள்ளத்தக்கது.

(23) சட்டைக்கு உள்துணி தைத்துக் கொள்ளுதல் (Lining the coat) என்பது ஆங்கில வழக்கில், ஒருவன் தன்னுடைய சுயலாபத்தை இரகசியமாய்த்தேடித்தேடிச் சேகரம் செய்துகொள்ளல் என்று பொருள்படும்.

(24) உண்மையான ஊழியன்போல் நடித்துத் தம்முடைய இலாபத்தைத் தேடிக்கொள்கின்றவர்களை இங்கு இயாகோ பாராட்டிப் பேசுகின்ருன்-உண்மையைப்பழித்துப் பொய்ம்மையைப் புகழ்வது புன்மையோர் இயற்கை. ஆன்மாஎன்பது இங்கு ஊக்கம்என்று பொருள்படும்.

(25) நான் அவனுக இருந்தால் பிறகு நானுக இருக்கமாட்டேன் – என்னுமிது, பொருள் மிக உள்ளதுபோல் தோன்றி உண்மையில் பொருள் யாது மில்லாத வெள்ளை மொழி. ராடரிகோவின் மனத்தைக் கலங்கச் செய்வதற்காக இயாகோ பயில்கின்ற சூழ்ச்சியாம் இது. எனினும் "நான் ஒத்தெல்லோவைப் போல் தலைமை பெற்றுவிட்டால், பிறகு இயாகோவாக இருந்து இந்த வஞ்சனைகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது" என்னுங் கருத்தும் இதற்குப் பொருந்தும். பெரிய பதவியில் இருப்பவர்களுக்கே யோக்கியமாக நடக்க இயலும் என்றும், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், முன்னேற்றம் அடைவதற்குச் சில வஞ்சனைகள் செய்யாமல் தீராதென்றும், எண்ணுவது கயவர் குணம்.

(26) உள்ளிருக்கின்ற எண்ணம் புறத்திற் செய்கையாகத் தோன்றும் வரையில் அவ்வெண்ணம் குறைவுற்றிருக்கின்றது. எண்ணத்திற்கு ஏற்றபடியே செயலும் இயற்றுவது அக்குறையை நிறைப்பதாம். தானே அப்படிச் செய்யமாட்டான் என்கின்ருன் இயாகோ. "என் இதயத்தின் இயற்கையான தூண்டுதல் ஒன்ருக, அதனை மறைத்துச்

நிறைந்த அதிர்ஷ்ட முடையவைகளா யிருக்கவேண்டும்! [28].

இயா:—அவள் தந்தையைக் கூப்பிட்டெழுப்பு. கிளப்பு அவனை, துரத்திப்பிடி, அவன் இன்பத்தில் விஷத்தை வை! தெருவிலே அவனை விளம்பிவிடு. அவள் உறவினர்களைத் தூண்டிவிடு. வளமுடைய தேயத்தில் அவன் வசித்தாலும் ஈக்களை விட்டு அவனை ஹிம்சை செய் [29]. அவனது இன்பம் இன்பமேயானாலும், அதன்ஒளி ஒருவாறு மழுங்கும்படி தொல்லைகள் சில இடையே எறி.

ராட:—இதோ இருக்கின்றது அவள் தந்தையின் மனை. இரைந்து கூப்பிடுகின்றேன்.

இயா:—செய்; ஆயினும், சனம்நிறைந்த நகரங்களில் இரவில் ஒருவரும் அறியாதபோது நெருப்பெரியக் கண்டதுபோல், நடுங்கும் மொழியும் பயங்கரமான கூக்குரலுமாக—[30].

ராட:—யாரங்கே, ஹோ! ப்ரபான்ஷியோ! ப்ரபான்ஷியோ பிரபுவே! ஹோ!

இயா:—எழுந்திரு! யாரங்கே, ஹோ! ப்ரபான்ஷியோ! திருடர்கள்! திருடர்கள்!! உன் மனையை, உன் மகளை, உன் பணப்பையைப் பார்த்துக்கொள்! திருடர்கள்! திருடர்கள்!!

செய்கையோ வேறாகவே செய்வேன் நான். என் இதயத்திலிருக்கும் எண்ணங்களை எல்லாரும் காணும்படி கைகளில் வைத்துக் காட்டமாட்டேன். ஒத்தெல்லோவைப் பகைக்கும்படி என் இதயம் தூண்டுகின்றது. அப்பகையை மறைத்து வைத்து, நட்புடையவன் போன்றே நடிப்பேன்" என்பது இவ்வாக்கியத்தின் கருத்து. காகங்கள் கொத்த=எல்லாருக்குந் தெரிந்து வீணாகும்படி.

(27) முரண்பட அமைந்த இவ்வாசகம், "ஒத்தெல்லோவிற்கு உண்மை ஊழியனைப்போல் நான் தோன்றினாலும், அவனைக் கெடுப்பதற்குக் காத்திருக்கின்ற பகைவனே ஆவேன்"—என்று பொருள்படும்.

(28) அந்த உதடு தடித்த மூரனுக்கு இவ்வளவு அதிர்ஷ்டமாவென்று ராடரிகோ பொறாமை கொள்கின்றான். மூர்ஜாதியார் கரிய நிறமும் தடித்த உதடுகளும் உடையவர்.

(29) இன்ப வளத்தில் வாழ்கின்ற ஒத்தெல்லோ அவ்வின்பத்தை அனுபவிக்காதபடி, இவ்வாறெல்லாம், ஈ மொய்ப்பதுபோல் தொந்தரைகள் செய்யவேண்டும் என்பது பொருள்.

(30) கூப்பிட வேண்டும்...என்று வாக்கியத்தை முடித்துக்கொள்க.

---

# அணியிலக்கணம்

## முன்னுரை

"சொல்லுக சொல்லிற் பயனுள" என்ற அக்கட்டளைக் கேற்ப, புலவர்தம் சொற்கள் எல்லாவகையிலும் மிக்க பயன் உடையவைகளாய் நிகழ்கின்றன. அப்பயனையும் நயமுறப்பகர்தல் பின்னும்சிறப்புடைத்து. பயனுடைய ஓர் உயரிய பொருளை நயம்படச் சொல்லும் இந்தமுறைமை அணிஎன அழைக்கப்படுகின்றது.

அணி என்னும் சொல் அழகு அல்லது ஒப்பனை எனப் பொருள்படும். வடமொழியில் 'அலங்காரம்' என்று கூறப்படுவதும் இதுவே. ஆங்கிலத்தில் இது Figures of speech என்னப் பெயர் பெறும். சொல்லப்படும் ஒரு உயரிய விடயத்தை எத்தனை வகைகளில் எப்படி எப்படியெல்லாம் புலவர் தம் திறமையைச்செலுத்திச் சுவைசெய்திருக்கின்றனர் என்பதை வகுத்துக் காட்டும் இலக்கணம் அணியிலக்கணமாம்.

பயனுடைய ஒரு விடயத்தை எடுத்துச் சொல்ல ஏற்பட்டிருப்பது இலக்கியம். எவ்வகைப் பொருள்கள் எவ்வெந்த முறையில் இலக்கிய ஆட்சிக்கு ஏற்றதாகலாம் என்பதை வகைசெய்து காட்டுவது பொருள் இலக்கணமாம். மனிதன் அடையவேண்டிய பயன்கள் "அறம் பொருள் இன்பம் வீடு" என நான்கு என்பர். ஆதலினால் இந்நான்கும் இலக்கியத்திற்கு இலக்காகக் கூடியனவென்று மதிக்கப்படுகின்றன. எனின் பொருள் இலக்கணம் இவைகளின் தன்மையையும் இவை நிகழும் முறைமையையும் எடுத்துக் கூறும். இப் பொருளிலக்கணத்தை அகப்பொருள் இலக்கணம்என்றும் புறப்பொருள் இலக்கணம் என்றும் இரண்டு பிரிவுகளாகத் தமிழில் பிரித்திருக்கின்றனர். ஒரு ஆண்மகனும் பெண்மகளும் கொள்கிற காதலால்அவர்களுக்கிடையே விளையும்இன்பநிகழ்ச்சிகளைவகுத்துரைப்பது அகப்பொருள் இலக்கணம். இவ்வகப்பொருள் இலக்கணம், இக்கலாநிலயத்தில் 1928, 1929-வது ஆண்டுகளில் எழுதப் பெற்றிருக்கின்றது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கினுள், இன்பம்அகப்பொருள் இலக்கணத்தில் அடங்கிய செய்தியாக, ஏனைய மூன்றினைப் பற்றிய செய்திகளை வகைசெய்து காட்டுவது புறப்பொருள் இலக்கணம் என அழைக்கப்படுகின்றது. இப் புறப்பொருள் இலக்கணம் இன்னும் இக்கலாநிலயத்தின்கண் எழுதப்பெறவில்லை.(இப்பொழுது துவக்கியிருக்கின்றஅணியிலக்கணம் முடிந்தபின் புறப்பொருள் இலக்கணம் புகலப்படும்.)

பயனிற் சிறந்த இவ் வகப்பொருள் புறப்பொருள் செய்திகளைப் புலவர்கள், சொற்கள் கொண்டுதான் சொல்ல வேண்டுமல்லவா. பெயர் வினை இடை உரி என்று பிரிக்கப்பட்டிருக்கிற இச்சொற்களின் இலக்கணத்தைக் கூறுவது சொல் இலக்கணமாம். சொற்கள்ஆவது எழுத்துக்களால். அவ்வெழுத்துக்களின் பிறப்பு அளவு அவை புணரும் விதங்கள் முதலியவைகளைக்கூறும் இலக்கணம் எழுத்திலக்கணம் என அழைக்கப்படும். இலக்கியங்களைப் பயில்வதற்கும் பிழையின்றித் தமிழை எழுதுவதற்கும் வேண்டிய அளவு,சொல்லிலக்கணமும் எழுத்திலக்கணமும் இதன்முன் இக் கலாநிலயத்தில் 1932,1933,1934வது ஆண்டுகளில் 'தமிழ்ப்பாடம்'என்னுந் தலைப்பின்கீழ் எழுதி முடித்திருக்கின்றோம்.

செவ்வியசொற்களால்உயரியபொருளைஉற்றுரைக்கும் இலக்கியமொன்று அமையும்போது, அதனைச் சொல்கின்ற ஓசையோ உவகை விளைவிக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும். உயரிய விடயம் ஒன்று அதற்குரிய ஓசையோடு சொல்லப்படும்போது செய்யுளாக அமைகின்றது. செய்யுளமைப்பிற்குரிய இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம். இந்த இலக்கணம், கலாநிலயத்தில் 1931-வது வருடத்தில் 'பா' என்னும் பகுதியும், 1933-வது வருடத்தில் "பாவி

னம்'' என்னும் பகுதியுமாக எழுதிமுடிக்கப்பெற்று இருக்கின்றது.

நற்பயன் தரத்தக்க விடயங்களை செவ்வியசொற்களால் ஓசையின்பம் உண்டாம்படி சொல்லுங்கால், சொல்லுகின்ற முறைமையால் அதனை அழகுபெறச் செய்வது ஒரு தனித் திறமையாதலின், அத்திறமையை எடுத்துக் காட்டி வகைசெய்து தருவது அணியிலக்கணத்தின் நோக்கமாம். ஒரு பெண்ணை அழகு செய்கின்ற ஆபரணங்கள் பல இருப்பதுபோல ஒரு கருத்தை அல்லது பொருளை அழகு செய்வதற்குரிய அணிகளும் பல இருக்கின்றன. தமிழிற்கேதனியாக அணியிலக்கணம் இல்லை யென்பார் சிலர்; உண்டு என்பார் சிலர். இந்த வாதங்களெல்லாம் நமக்கு வேண்டா. தொல்காப்பியர் 'உவம இயல்' என உவமையைமட்டுமே பொருளதிகாரத்தில் உரைத்திருக்கின்றார். ஆதலின், இப்பொழுது அணியிலக்கணம் என அழைக்கப்படுவது அனைத்தும் நேராக வடமொழி அலங்கார நூல்களேயாகும். அவ்வடமொழியிலும் 'உவமை' யொன்றே உண்மையான அலங்காரமாகுமென்றும் மற்ற அலங்காரங்களெல்லாம், அத்துணைச் சிறப்புடையன அல்லவென்றும், ஒவ்வோர் வகையில் அவ்வுவமையினின்று பிறந்தவைகளே அவை ஆகுமென்றும் பெரும்பாலோர் கருதுகின்றனர். முதலில், அணிகள் எவ்வாறு அமைக்கின்றன என்பதைக் கருத்துட்கொண்டபின், இவ்விலக்கண நூல்களின் இயல்பு சரித்திரம் முதலியவைகளை ஆராயப்புகுவது நலமாமென நினைத்து வடமொழியிலும் தென்மொழியிலும் பயின்றுவருகின்ற அணிகளின் இலக்கணத்தை இங்கு இயம்பத் துவக்குகின்றோம்.

எழுத்தினுற் சேர்ந்த சொற்களைக்கொண்டு உபரிய பொருள்களை ஓசைநயமுடன் அணிபெற அமைப்பினும்,பயில்வோர்க்கு அது நல்வாழ்க்கை என்னும் ஒரு பயனைச் செய்துவைக்காதாயின், இலக்கியம் என்னும் பெயரிற்கு உரியதாகாது. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது'' என்றார் திருவள்ளுவர். இந்த அன்பு அறன் எனும் பயனை எய்துவிக்கும்படி அமைவதே இலக்கியமாம். அப் பயன் விளையவல்ல இலக்கியங்களை இயற்றுவதுதான் புலமை. புலமையின் இலக்கணத்தை வகுத்துரைப்ப தென்பது இயலாதாகையால், புலமைஇலக்கணம் என்பது ஒன்று எம்மொழியிலும் எழுதப்பெறவில்லை. ஆயினும் வேற்றுமையைத் தோற்றமென விலக்கி ஒற்றுமையாகிய மெய்ம்மையினிடத்து உள்ளத்தைக் கொண்டுசேர்க்கின்ற குறிப்புடையதே புலமை என்று ஒருவாறு கூறலாம். ஒரு வகையில் கலை (art) என்பதும், மதம் (religion) என்பதும் இப்புலமையினின்று வேறுபட உணரமாட்டாமல் நிற்கின்றன.

இத்தகையவோர் ஒற்றுமை உணர்ச்சியை எழுப்பி வளர்க்கும் தன்மையில் அணிகள் மிக்க உதவியாக நிற்கின்றன என்று எமக்குத் தோன்றுவதால் அவ்வணி யிலக்கணத்தை யெல்லோரும் ஆழ்ந்து பயிலவேண்டும் என்னும் விருப்பமுடையவர்களா யிருக்கின்றோம். ஒரு மாதின் முகம், பார்ப்பவர் மனத்தில், தண்மையும் அமைதியும் இன்பமும், தன்னுடைமை ஆக்கிக்கொள்ளவேண்டும் என்னும் கீழ்மையுடைய எண்ணத்தை எழுப்பாமல் அம்முகத்தை அம்முகத்தின் பொருட்டே தன்னிலும் மேலாக உயரநோக்கி மகிழ்கின்ற ஓர் மகிழ்ச்சியையும், விளைவிக்கின்ற தன்மையினுல், அம் மாதின் முகத்தை "மதிபோன்ற முகம்'' என்று வருணிப்பார் புலவர். சந்திரன் ஆகாயத்தி லிருப்பது, பொருளளவில் ஒரு மாதின் முகத்தொடு எவ்விதச் சம்பந்தமும் இல்லாதது. ஆயினும், மேற்குறித்த பண்புகளால் இம் மாதின் முகமும் ஆகாயத்திலுள்ள சந்திரனும் புலவர் மனத்தில் ஒற்றுமைப்படுகின்றன. சந்திரனைக் காண்கின்றபோது மாதர்முகத்தினை நினைத்து உவக்கலாம். மாதர்முகத்தைக் காணும்போது சந்திரனைநினைத்து உவக்கலாம். இவ்வுவகையால் இரண்டும் உறழலாகின்றன. மதிபோன்ற முகம் என்னும் இது உவமை அணி. ஆயினும், பண்பினுலும் பயனுலும் இவை ஒற்றுமைப்பட்டனவேனும், ஒன்றினை ஒன்று போன்று இருக்கின்றது என்னும் முறையில், அவ்விரண்டும் பொருள் அளவில் வேறுவேறு ஆகும் நிலைமையில் கருதப்படுகின்றன. பிறகு, பொருளளவுமுள்ள வேற்றுமைஎண்ணங் குறைந்து, ஒற்றுமையின்எண்ணமே அதிகமாகி வளரவளர, மதிப்பான்ற முகம் என்பதற்குப் பதிலாக, முகமாகியமதி (அல்லது முகமதி) என்று சொற்களை மாற்றுவதைக் காண்கின்றோம். முகம் ஆகிய மதி, என்னுங்கால், (முன் உவமையில், மதி போல முகம் இருந்தது என்பதையும் விட ஒற்றுமை நெருங்கி) முகமே மதி ஆகிவிட்டது என்று அவ்வொற்றுமை முதிர்கின்றது. இவ்வாறு, ஒன்று மற்றொன்று போல இருப்பதுஅல்லாமல், அது மற்றொன்றே ஆகிவிட்டது என்ன உரைக்கும் இதனை உருவக அணி என்னக் கூறுவார். இதன்மேலும் ஒற்றுமைப் பாவனை உயர்ந்து செல்வதுண்டு. ஒருத்தியின் 'முகத்தைக் கண்டேன்' என்பதற்குப் பதிலாக, "மதியைக் கண்டேன்'' என்றுங் கூறிவிடலாம். மதியென்பது, இங்கு மதிபோன்ற முகம் என்னும் பொருளைத் தரும். "சாளரந்தோறும் சந்திர உதயம் கண்டார்'' என்று பலகணிகளில் தோன்றிய மாதர் முகங்களைக் கம்பர் வருணித்திருக்கின்றார். இங்கு முகம் என்ற சொல்லே இல்லை. சந்திரன் என்னும் அச்சொல்லே முகத்தைக் குறிக்கும்படி அவ்விரண்டு பொருள்களினுடைய நினைவுகளும் ஒற்றுமைப்பட்டுக் கலந்தன. இவ்வாறு கூறுவதை அணிவகையில் சேர்க்காமல் ஆகுபெயர் என்று கொண்டிருந்தாலும், உவமை உருவகமாகி உருவகத்தினின்று ஆகுபெயர் ஆவதிலிருந்து, புலமையானது ஒற்றுமை யுணர்வை வளர்க்கின்ற நுண்மையை இச் சிறு சரிதத்தினுள் காணலாம். இப்படியே பெரும்பாலும் எல்லா அணிகளும் அந்தத்தில் ஒரு ஒற்றுமையை உள்தழுவி யிருக்கின்றன வென்று மதித்தல் கூடும் என நினைக்கின்றோம். ஆதலின் இலக்கியச் சுவை தேர்வதுடன், அணியிலக்கண நுட்பங்களை அறிந்துகொள்வதும் நம் மனத்தினைப் பண்செய்யப் பெரிய உதவியாய் நிற்கும். இதுவுமன்றி, அணிகளை அமைக்கின்ற வகைகளையும், அவை ஒன்றோடொன்று உறவுகொண்டு நிற்கின்ற தன்மையையும் இவ்வுறவிற்கிடையே தெரிகின்ற நுண்ணிய சிறப்புஇயல்களையும், இவைகளைப் புலவர் கையாளுந் திறமையையும், நன்றாகப் பயின்று நினைவில்வைத்துக்கொள்ள முயல்வதால், மனமானது ஒரு விடயத்தை ஆழ்ந்து சிந்தித்து அதன் அம்சங்களையெல்லாம் உட்கொண்டு,முன்பின் ஆராய்ந்து அதற்குரிய தகுதியை மதிக்கின்றவொரு நற்பழக்கம் எய்துவதுமாகும்.

அணியின் இலக்கணத்தை விளக்கும்போது அதற்கு உதாரணமாகக் காட்டப்படும் செய்யுள்களும் மிக்க சுவையுடையனவாக இருக்குமாதலால், இலக்கணஅறிவு ஒருபுறம் இருக்க, இலக்கிய இன்பமும் இதனுல் விளையுமென்பதில் ஐயமில்லை.

அடுத்த இதழிலிருந்து, அணிகளைத் தனித்தனி எடுத்து அவைகளின் இலக்கணத்தைக் காட்டிவருவோம்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

புத்தகவரவு:—'ஊழியன்' பத்திரிகையின் ஆசிரியர் திரு ராய. சொக்கலிங்கன் அவர்கள், வேலூர்ச் சிறையின்கண் பாடிய பாக்கள் அடங்கிய நான்கு புத்தகங்கள் எம் பார்வைக்கு அனுப்பப் பெற்றிருக்கின்றன:-காந்தி பதினெண்வெண்பா,விலை 5 அணு. புதுமைப்பாக்கள், விலை 4 அணு. தாலாட்டுங் கும்மியும், விலை 4 அணு. காந்தி இரு பா, விலை 3 அணு. இவை, சென்னை இலங்கசெட்டித் தெரு, ஊழியன் ஆபீஸில் கிடைக்கும்.

*   *   *

நடனத்தில் மிக்க வல்லமை வாய்ந்த ப்ரேட் ஆஸ்டேர் என்னும் மாது, தன் கால்களை இரண்டு லக்ஷம் பவுனுக்கு இன்ஷ்யூர் செய்திருக்கின்ருள் என்று தெரிகிறது.

*   *   *

டேன்ஸ் என்னும் நகரில் ஒருவர் இறந்த மறுநிமிஷம் அவர் இருபது வருடங்களாக வளர்த்து வந்த அவருடைய நாயானது அவருக்கு அருகில் படுத்துத் தன்னுடைய உயிரைவிட்டது.

*   *   *

அமெரிக்காவில் சட்டசபைக்கு அபேக்ஷகர்களாக நிற்க விரும்புகின்றவர்களின் அறிவைச் சோதிக்கும்படி அவர்களுக்குப் பரிக்ஷைகள் வைக்கவேண்டும் என்று சிலர் வற்புறுத்தத் தலைப்பட்டிருக்கின்றனர்.

*   *   *

ரேடியத்தின் உதவியால் வைரத்தை மரகதமாக்கி விடலாம் என்று சிலர் கூறுகின்ருர்.

---

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road. Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult**
**NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

இண்டோ-கம்மர்ஷியல்
**பாங்க், லிமிடெட்.**
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனுபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதருஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

**யுனைடெட் இந்தியா**
**லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.**
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— **செம்புதாஸ் தெரு,** சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)